உ

தேவிசகாயம்.

ANUBOGAVYTHIA

BRAMAH RAHASIAM.

அநுபோகவயித்திய

பிரம்மரகசியம்.

எட்டாம்பாகம்.

இஃது,

ஜெகந்நாதஸ்தலம்

கோஷாயிசுவாமிகள்

அநுக்கிரகத்தின்படி

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியார் குமாரர்

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-புரசை.

1914.

Registered Copyright.

உ

தேவிசகாயம்.

முகவுரை.

இந்த அநுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும்நூலானது வெளிவந்த காரணமும், இதனுள் அடங்கிய விஷயங்களுக்கும், இங்ஙனம் முகவுரையெனப் பெயர்வகித்து சுருக்கமாக எழுதிமுடிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் நெடுவருடங்களாக காசிமுதலான திவ்யக்ஷேத்திரயாத்திரை வாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள் யாவையும், இன்னும்சிலசைமுறைகளையும் சேர்த்து யின்னூலுக்கு போதுமான பொருளைச்சிலவிட்டு அச்சிடுவித்தவராகிய ம-௱-௱-ஸ்ரீ; பூ. சு. குப்புசாமி முதலியார், அநுமதியின்றி இந்நூலை பிறர் எவ்விதத்தும் அச்சிடாதபடிக்கு (கெவர்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்டர் காப்பிரயிட் செய்திருக்கிறார்.

{ அநுபோகவயித்திய பிரம்மரகசியம் 8-காண்டங்களும் தயாராயிருக்கிறது. }

காண்டம் 1-க்கு விலை அணா	0	8	0
ஷை 4-காண்டமும் ஒரேகட்டடம்	1	8	0
ஷை 8-காண்டமும் ஒரேகட்டடம்	3	0	0

V. P. போஸ்ட்சார்ஜி பிரத்தியேகம்.

ரிப்ளை கார்ட்டெழுதினால் பதில்சங்கதிகிடைக்கும்.

☞ பூ. சு. குப்புசாமிமுதலியார்,
ஸ்ரீசுந்தரவிலாசம்பிரஸ்.
பிரம்பூர் பாரக்ஸ் போஸ்ட் மதராஸ்.

தேவிசகாயம்.

அவுஷிதங்களின் அகராதி.

அவுஷதங்கள்.	பக்கம்.
ஸ்திரீகளுக்குக் காணும் சூதகக்கட்டுக்கு	11
சூதகத்தைக் கிரமமாக உண்டாக்க	0
சூதகவாயு சூசிகவாயுகளுக்	0
சூதகவலிக்கு	0
கெற்பஸ்திரீகளுக்குக் காணும் துவாலைக்கு	12
துவாலையால் காணும்தாகமூர்ச்சைக்கு	0
கெற்பஸ்திரீகள்சுரத்திற்கு	0
கெற்பஸ்திரீகளின்நீர்சுரப்	0
கெற்பஸ்திரீகளின் கல் அடைப்பிற்கு	0
கெற்பஸ்திரீகளுக்கு-10-மாதங்களில்வரும்கெற்பவலிகட்	
1-ம்மாதத்திற்காணும்வலி	13
2-ம்மாதத்திற்காணும்வலி	0
3-ம்மாதத்திற்காணும்வலி	0
4-ம்மாதத்திற்காணும்வலி	0
5-ம்மாதத்திற்காணும்வலி	0
6-ம்மாதத்திற்காணும்வலி	0
7-ம்மாதத்திற்காணும்வலி	14
8-மமாதத்நிற்காணும்வலி	0
9-ம்மாதத்திற்நாணும்வலி	0
10-ம்மாதத்திற்காணும்வலி	0
வயற்றில் பிள்ளைபிழைத்திருப்பதுதெரிய	0
வயற்றில்இரந்தபிள்ளைவிழ	0
இரந்தபிள்ளைவிழபூசுமருந்	15
நஞ்சுக்கொடிவிழ	0
பிரசவித்த ஸ்திரீயின் சுவாசம்திர உருண்டை	15
பிரசவித்தஸ்திரீகளுக்கு கிழ்வயிறு மார்புசிரசு குத்தல் நோவிற்கு	0
பிரசவித்தஸ்திரீயின் மார்பில் பால்சுரக்க	16
பால்வரண்டுபோக	0
முலைக்காம்புரணமாறபத்து	0
ஸ்தன்னியகட்டிக்குபத்து	0
குழந்தைகளின்சுரமாந்தத்	17
ஊதுமாந்தத்திற்கு	0
விஷமாந்தத்திற்கு	0
நீர்மாந்தத்திற்கு	0
பால்மாந்தத்திற்கு	0
செரியாமாந்தத்திற்கு	18
சுழிமாந்தத்திற்கு	0
தலைமாந்தத்திற்கு	0
மாந்தம்-8-க்கும்விபரம்	19
மாந்தம்-8-க்கும்	0
மாந்தவலிப்புக்கு	0
வயற்றுப்பொருமல்மாந்தத்	0
கருங்கிரந்திக்கு	20
செங்கிரந்திக்கு	0
கிரந்திஒன்பதிற்கும்	0
சுரத்திற்கு	0
தோஷம்-9-க்கும்மாத்திரை	21
அதிசாரபேதிக்கு	0
சீதபேதிக்கு	0
கால்கடுவன்மண்டைகடுவ	0
வயருப்பல்மந்தத்திற்கு	22

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
சிரங்குகள் ஆர	0	கண்குளிர்ச்சிக்குமருந்து	30
வயற்றுப்பலுக்கு	0	கண்ரெப்பைவீக்கஒத்தட	31
தொப்புள் புண்ணுக்கு	0	கண்சிவப்புபூவிழுதலுக்கு	0
இருமலர்த்தம்விழுதலுக்	23	கண்படலம்-எ-க்கும்பத்து	0
வயற்றில்எண்ணை தங்கினால்	0	வேறுமுறை அஞ்சனம்	0
சாம்பல்மண் தின்னால்	0	கர்ணரோகங்களுக்குதைல	0
பால்உண்ணவிடில்	0	காதுநோயிற்கு முசுறு முட்டை எண்ணெய்	32
குடித்தபாலைக்கக்கினால்	0	காதில்வரும் சீழ்நிற்க எண்	0
வாந்தியைநிருத்த	24	காதுயிரைச்சல்தீரஎண்	33
ஜலுப்புக்குகியாழம்	0	காதுமந்தம்தீரயிஞ்சிச்சா	0
ஜலுப்பிற்குபத்து	0	காதுப்புழுவுவிழ	0
பேதியைநிருத்த	0	காதுயெகுக்ஷிதீர	0
பேதியுண்டாக	0	காதுவலிதீர	34
கக்குவான்தீரநெய்	25	ஒற்றைத்தலைநோய்தீரதை	0
வாய்ரிணத்திற்குபூசுமருந்து	0	இருபக்கதலைநோய்தீரதை	0
நீர்க்கட்டுக்கு	0	நீர்கொண்டமண்டயிடிக்கு	0
அண்டவீக்கத்திற்கு	0	கபாலவாய்விற்குத்தைலம்	0
அண்டவீக்கத்திற்குக்கட்	26	கபாலவாய்வுக்குப்புகை	35
சகலசுரங்களுக்கும்குளிர்சுரத்திற்குமாத்திரை	0	காசம்-கூசு-க்கும் சூரணம்	0
விஷசுரத்திற்குக்கியாழம்	0	சுவாசகாசத்திற்குப்புகை	0
பழயசுரத்திற்குக்கியாழம்	0	காசம்-ரு-க்கும்எண்ணெய்	36
அஸ்திசுரத்திற்குச்சூரண	27	ரத்தகாசம்தீரப்பால்	0
அசாத்தியசுரத்திற்குக்கிய	0	இருமலுக்குமிளகுசூரணம்	0
அதிசாரசுரத்திற்குக்கியாழ	0	கிரகணிரோகம்-11க்கும் கிரகணி-11-ந்தீரமாத்	37
நடுக்கல்சுரத்திற்குக்கியாழ	0	வாய்வுகிரகணி ஊஷ்ண பேதிக்குச் சூரணம்	0
அஜீர்ணசுரத்திற்குக்கியா	28	வாதபித்தசிலேஷ்மகிரகணிக்கு அடை	0
விடாசுரத்திற்கு	0	வயருகடுப்புத்தீரசூரணம்	0
வாதசுரத்திற்குக்கியாழம்	0	வயர்கடுப்பில்வேறுமுறை	38
சிலேஷ்மசுரத்திற்குக்கியா	29	மூலக்கடுப்பிற்குச்சூரணம்	0
யானைக்கால்சுரத்திற்குகியா	0	சகலகழிச்சலுக்கும்கஷாய	0
ஊஷ்ணசுரத்திற்குகியாழம்	0	அதிசாரம்-சு-க்கும் சூரண	0
நேத்திரரோகங்கள் கூச-க்கும் அஞ்ஞனம்	0	சுரமில்லாதஅதிசாரத்திற்குசூரணம்	39
கண்ணெரிவிற்குமிளகஞ்ச	30		
கண்ணோவுக்குமருந்து	0		
கண்ணோவுக்குஒத்தடம்	0		

அவுஷதங்கள்.	பக்கம்.
அதிசாரசீதபேதிக்குமாத்	0
அஜீரணபேதிக்குகஷாயம்	0
சீதபேதிரோகங்களுக்கு	0
சீதபேதிக்கு மாத்திரை	40
குழந்தைகளுக்குவேறுமு	0
பெரியவர்களுக்குவேறுமு	0
குழந்தைகளுக்குவேறுமு	0
உண்ணுக்கு வளர்த்தியால்காணு மிருமல்தீர ப	41
ரிணவாடைபிடிக்கு கொப்பளிக்கும்கியாழம்	0
தொண்டை கரகரப்பிற்குசூரணம்	0
சுண்ணும்பைதிண்ண வாய்ரிணத்திற்குக்கியா	0
நெஞ்சுரிணத்திற்குகியாழ	42
தொண்டைகம்மலுக்கு	0
தொண்டைநோயிற்குகியா	0
வாய்ரணத்திற்குகியாழம்	0
தந்தவாயுக்குப்பொடி.	0
பல்பூச்சிகள்விழ மேல்பூசும்எண்ணெய்	43
உதடுமேகப்புண்ணுக்குள	0
குப்பைமேனிஉபயோகம்	0
சிவதைவேர்உபயோகம்	44
சீமைஅகத்தியிலைஉபயோக	0
சீக்காய்கொழுந்தின்உப	0
சுருள்பட்டையின்உபயோ	0
கீழாநெல்லிஉபயோகம்	0
தகரைவேரின்உபயோகம்	45
திருநீற்றுபச்சையின்உப	0
ஆகாயத்தாமரைஉபயோ	0
ஆடுதின்னாப்பாளையின்உப	0
எள்ளின்உபயோகம்	46
கஞ்சாங்கோரையிலை உப	0
கருநொச்சியிலையின்உபயோ	0
கர்ப்பூரவள்ளியிலைஉபயோ	0
காக்கட்டான்விரைஉபயே	46
நிலவிளாம் நரிவிளாம் குட்டிவிளாம்இலை உப	47
சிறுநெரிஞ்சி சமூலஉபயோ	0
ஆனைநெரிஞ்சியின் உபயோ	0
பிரண்டை சமூலஉபயோக	0
பூவரசன்பட்டைஉபயோ	0
பொடுதலைசமூலத்தின்உப	48
வல்லாரைசமூலஉபயோகம்	0
விஷ்ணுகிராந்திஉபயோகம்	0
வெட்டிவேரின்உபயோகம்	0
வெண்டயிலையின்உபயோக	0
அம்மான்பச்சரிசி சமூலஉ	49
கற்றாழைசோறின்உபயோக	0
விலாரியிலையின் உபயோகம்	0
அத்திப்பட்டையின்உபயே	0
புங்கன்வேரின் உபயோகம்	50
நெல்லிவேரின்உபயோகம்	0
நெல்லிக்காயின்உபயோகம்	0
நெல்லிவிதையின்உபயோக	0
அருநெல்லிக்காய்உபயோ	0
பனங்கிழங்கின்உபயோகம்	51
பனனுங்கின்உபயோகம்	0
பனங்கள்ளின்உபயோகம்	0
மாதுளம்பிஞ்சியின்உபயோ	0
இலந்தம்பழம்உபயோகம்	0
கள்ளியிலைஉபயோகம்	0
வேப்பனிலைஉபயோகம்	52
வேப்பங்கள்ளின்உபயோக	0
வேப்பம்பட்டை உபயோக	0
பூவரசன்கொட்டைஉபயோ	0
அழிஞ்சிவேர்பட்டைஉப	0
ஆலம்பாலின்உபயோகம்	53
ஆலம்பட்டைஉபயோகம்	0
சுரயிலையின்உபயோகம்	0
பாகயிலையின்உபயோகம்	0
கொடிகுரிஞ்சாயிலைஉபயோ	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
கொடிகுரிஞ்சாவேர்உப	54	அருசுவையின்உபயோகம்	61
கோவயிலையின்உபயோகம்	0	அன்னபின்னத்தி உபயோ	62
கோவக்கிழங்கின்உபயோக	0	ஆகாபசும்பாலின்உபயோ	0
கோவைக்காயின்உபயோக	0	ஆட்டின்கொழுப்புஉபயோ	0
உத்தாமணியிலைஉபயோகம்	0	ஆட்டுப்பாலின் உபயோகம்	0
சித்திரமூலவேர்உபயோக	55	சித்தாமணக்கெண்ணெய்உ	0
வெள்ளரிக்காயின்உபயோ	0	இரவிலுண்ணும்பதார்த்தங்களின் உபயோகம்	63
வெள்ளெரிவிதைஉபயோக	0		
தாமரைக்கிழங்கின்உபயோ	0	இராப்பசுவின்பாலில்உப	0
பேய்ப்புடலின்வேர்உபயோ	0	இரும்பு கண்டியின் வென்னீர் உபயோகம்	0
மிளகரணைவேர்உபயோ	56		
மராட்டிமொக்கின்உபயோ	0	இலந்தன்வேரின் உபயோக	0
மூக்குரட்டைவேர்உபயோ	0	இலுப்பைபிண்ணாக்கி வுப	64
திராக்ஷபழத்தின்உபயோக	0	கொட்டைப்பாக்கின்வுபயோ	0
காட்டாமணக்கிலைஉபயோ	0	இளநீரின்வுபயோகம்	0
துத்திப்பூவின்உபயோகம்	57	உகரம்பட்டையின்வுபயோ	0
துத்திவிதையின்உபயோக	0	ஊமத்தின்யிலையின்வுபயே	65
விழிதியிலையின்உபயோக	0	எருக்கன்பாலில்உபயோக	0
விழிதிவேரின்உபயோகம்	0	எருமைசாணத்தின்வுபயோ	0
தும்பயிலையின்உபயோகம்	0	எருமைத்தயிரின்உபயோ	0
தும்பப்பூவின்உபயோகம்	58	எருமைநெய்யின்வுபயோ	66
கண்டங்கத்திரியிலைஉபயோ	0	எருமைப்பாலின்வுபயோ	0
கண்டங்கத்திரிக்காய்உப	0	எருமைமோரின்வுபயோக	0
பசுமுன்னையிலைஉபயோகம்	0	எருமைவெண்ணெயின் வுப	0
நாவல்பட்டையின்வுபயோ	0	எருமைமூத்திரத்தின்வுப	0
மாவிலிங்கம்பட்டைவுபயே	0	எலிக்காதிலையின்வுபயோக	0
பாதரிவேரின்வுபயோகம்	59	எலிபாமணக்கன்பாலில்வு	67
சண்பகவேரின்உபயோகம்	0	வெள்ளருக்கன்பட்டைவுப	0
இலுப்பைவேரின்உபயோ	0	வெள்ளைக்கடுகின்வுபயோ	0
சாரைபருப்பின்உபயோக	0	புன்னகொட்டையின்வுப	0
முசுமுசுக்கயிலைவுபயோகம்	0	நிலப்பனங்கிழங்கின்வுபயே	0
கோவக்கிழங்கின்உபயோக	60	முசுர்க்காதிலையின்வுபயே	68
தேள்கொடுக்கிலைஉபயோக	0	கோழியவரையிலையின்வுப	0
நன்னாரிவேரின் உபயோகம்	0	சிறுபூனைகாலிலையின்வுப	0
நன்னாரிவேர்வேறுவிதஉப	0	செந்தாமரையிலையின் வுப	0
நாகமல்லிவேரின்உபயோ	61	சீந்தில்கிழங்கின்வுபயோக	0
நீராகாரத்தின்உபயோகம்	0	தண்ணீர்விட்டான்கிழங்கு	69

அவுஷதங்கள்.	பக்கம்.
நெய்தல்கிழங்கின்வுபயோக	0
செங்கழநீர்கிழங்கின்வுப	0
கோரைக்கிழங்கின்வுபயோ	0
இஞ்சிக்கிழங்கின்வுபயோ	70
கருஞ்செம்பைபூவின்வுப	0
வெங்காயவிதையின்வுபயே	0
துளசிவிதையின்வுபயோக	0
சங்கன்வேரின்வுபயோக	0
பேராமுட்டிவேரின் வுபயோகம்	71
அவுரிவேரின்வுபயோகம்	0
முக்காவேளைவேரின் வுபயே	0
பெரியநங்கையிலையின்வுப	0
மிளகுதக்காளியிலையின்வுப	0
பேரீச்சங்காய்பழத்தின்வு	72
தேயிலையின்வுபயோகம்	0
பச்சைதேயிலையின் வுபயோ	0
காசிக்கட்டியின்வுபயோகம்	0
சூரத்துநிலாவரையின்வுப	0
நிலாவரைவேறுவிதவுபயே	73
அதிமதுரவேரின்வுபயோ	0
சோம்புவிதையின்வுபயோ	0
சீரகத்தின்வுபயோகம்	0
கொத்தமல்லிவிதையின்வு	74
காப்பிக்கொட்டையின்வுப	0
சடாமாஞ்சில்வேரின்வுப	0
அக்கராகாரத்தின்வுபயோ	0
ஜாதிக்காயின்வுபயோகம்	75
மிளகின்வுபயோகம்	0
வெள்ளைப்பூண்டின்வுபயோ	0
புகையிலையின்வுபயோகம்	0
சாலாம்பிசிரிவேரின்வுப	76
சுக்குவுலர்ந்தகிழங்கின்வுப	0
மஞ்சள்கிழங்கின்வுபயோக	0
கசகசாவிதையின் வுபயோ	0
அப்பியங்கஸ்நானத்தின்வு	77
துவரம்பருப்பின்வுபயோக	0
கடுக்காயின்வுபயோகம்	0
பாவனசீரகத்தின்வுபயோ	78
பாவனமிளகின்வுபயோக	0
பாவனதிப்பிலியின்வுபயோ	0
பாவனஓமத்தின்வுபயோ	0
வாதுமைஹல்வாயின்வுப	79
கோதுமைஹல்வாயின்வுப	0
போகவல்லிஹல்வாயின்வு	0
கிராம்பின்வுபயோக	0
வெந்தயத்தின்வுபயோகம்	80
பச்சைக்கடலையின்வுபயோ	0
கசகசாவின்வுபயோகம்	0
அகத்திக்கீரையின்வுபயே	81
முருங்கைகீரையின்வுபயே	0
புளியன்துளிரின்வுபயோக	0
கீரைத்தண்டின்வுபயோக	0
புதினாகீரையின்வுபயோ	0
வெள்ளைக்கீரையின் வுபயோ	0
பருப்புக்கீரையின்வுபயோ	0
பசலக்கீரையின்வுபயோ	82
பால்சொரிகீரையின்வுபயே	0
முளக்கீரையின்வுபயோகம்	0
முள்ளுக்கீரையின்வுபயோ	0
அரைக்கீரையின்வுபயோகம்	0
சிறுகீரையின்வுபயோகம்	0
புளியாரைகீரையின்வுபயே	0
கோழிக்கீரையின்வுபயோ	0
கொத்தமல்லிக்கீரையின்உ	83
தென்னங்குருத்தின்வுபயே	0
செந்தாமரைபூவின்வுபயோ	0
பன்னீர்பூவின்வுபயோகம்	0
பிரம்மதண்டிபாலின்வுப	0
கருவேப்பிலையின்வுபயோக	0
தேங்காய்ப்பாலின்வுபயோ	0
குன்மம் மூலவாயுபாரிச வாயுவயிற்றுவலிக்கு	84
சகலகுன்மத்திற்கு	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
அண்டவாதம்,நடுக்குவாதம்முடக்குவாதம்சந்துவாதம் இவைகட்கு	0	அண்டவாதத்திற்கு	0
		தண்டுவாதத்திற்கு	0
		சந்துவாதத்திற்கு	0
அரைவாதம்கால்வாதத்திற்	0	தோள்வாதத்திற்கு	0
வாதங்கடுப்பு குத்து கைகால்முடக்கு திமிர்வாதத்திற்கு	0	நடுக்குவாதத்திற்கு	87
		கெண்டைக்கால்வாதத்திற்.	0
பக்கவாதம் முகவாதந்திமிர்வாதம்முதலானசகலவாதத்திற்கும் உட்குத்துப் புறவீச்சுக்கும்தலைவலிக்கும்மேற்பூச்சு	85	இடுப்புவலி உளைவுமேகநீர்கட்டு சூலைகளுக்கு	0
		சூலைக்கடுப்பு வாயு உட்குடைதல் வாதக் கடுப்புக்கு	0
		இடுப்புவலி காசைதிக்கு	0
வாதக்கடுப்புக்குமேற்பூச்சு	0	மோளிவீக்கத்திற்கு	0
முழங்கால்வாதத்திற்கு	0	திமிருக்கு	88
வாதக்கடுப்புவாயுக்கு	0	அலகுப்பூட்டுக்கு	0
வாதக்கடுப்புமுடக்குவாதம்மேகவாயுவிற்கு	86	எரிவாதத்திற்கு	0
		தோள்கடுப்புக்கு	0

அவுஷதங்களின் அகராதி

முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்.

அனுபோகவயித்திய

பிரம்மரகசியம்.

எட்டாங்காண்டம்.

கூரக்காவயித்தியம்.

விநாயகர் துதி

விருத்தம்.

அவனியிலுள்ளோரெல்லா மனுபவமாகச்செய்ய
குவலயம்புகழுமிந்தக் கூரக்காவயித்தியந்தன்னை
பவமரப்பிணிகளோடப் பகரசெந்தமிழினாலே
சிவனருளங்கரன்தன் சேவடிசென்னிவைப்பாம்.

முகவுரை.

ஆசிரிய விருத்தம்.

ஆராய்ந்துபலபலநூல் தேடித்தேடி
அனுபோகமாகவே தேர்ந்தோர்தன்னை
ஏராளமாகவே யடுத்துவாங்கி
எண்மர்களின்பாதமலர் தினமும்போற்றி
நேராகுங்கூரக்கா வயித்தியந்தானும்
நெடுநாளாயோசித்து மனதுகூர்ந்து
சீராகப்புவியிலிது விளங்கவேண்டி
செஞ்சியேகாம்பரமும் வெளியிட்டானே. (1)

வெளியிட்டயின்னூலை நம்பவேண்டும்
விளங்கவேதிரைகடல்சூழுலகமெங்கும்

தெளிவாகும்மூலிவகை யரியக்கண்டும்
தான்புகலும்முறையளவு போலேயுண்டும்
ஒளியாமலுரிதியென்றே கொள்ளவேண்டும்
ஓட்டமதுபிணிகளென்றே பறக்கவேண்டும்
அளவாகுந்தாவரவர்க் கங்களென்றும்
அனுபோகக்கூரக்கா வயித்தியம்பாரே. (2)

பார்க்கவேசித்தர்கை யாண்டமூலி
பல்லோர்க்குப்பதார்த்தவகை யாச்சுதப்பா
ஏர்க்கவேயதையறியா யுலகிலேதான்
ஏங்கியேவலைந்தலைந்து விழலாகாமல்
தீர்க்கவேபிழைக்கடைக்கு ளிருக்குங்கீரை
தனையரிந்துஉண்பதற்குச் சூக்ஷமாகக் (
கோர்க்கவேகூரக்கா வயித்தியந்தன்னை
குணமாகவேவோதிவைத்த வுண்மைகாணே.

உண்மையெனுமொருமொழியே யுரிதியாக
உலகுதனில்கீர்த்தியது கொள்ளவேணும்
எண்ணமதுயின்னூல்மேல் வைக்கவேணடும்
எத்தொழிலைச்செய்தாலும் பக்திவேண்டும்
தன்மையுளபுத்திதன்னை வளர்க்கவேண்டும்
தன்புகழைதான்புகழா திருக்கவேண்டும்
வண்மைபெரும்முன்னோர்கள் சொன்னவாக்கை
வரமெனவேநம்பிமனம் மகிழுவீரே.

நாதாக்கள்சொன்னமொழி பொய்யாகாது
நம்பாதவம்பருக்கு மெய்யாகாது
சோதியாம்பதினெண்பேர் சொன்னவாக்கு
ஜெகமீது ஒருக்காலும் வீண்போகாது
நீதியாமிதைவிடவே யினங்கிட்டாது
நிரையாகுங்கூரக்கா வயித்தியந்தன்னை
ஆதியாய்க்கைபேந்திக் கன்னுற்றோர்கள்
அகிலமிசைப்பிணியனுகா வாழ்வார்தாமே. (5)

முகவுரை - முற்றிற்று.

ஸ்திரீகளுக்குக்காணும் சூதகக்கட்டுக்கு.

காட்டாமணக்குக்கிழங்கை பச்சையாகக்கொண்டுவந்து அம்மியை சுத்தப்படுத்தி அதில் வைத்து பசும்பால் விட்டு மைபோலரைத்து எடுத்து கொட்டைப்பாக்களவுவீதம்பசும் பாலில் கலந்து மூன்றுநாள் காலையில் கொடுத்துவர குண மாகும்.

இதுவுமது.

செம்முள்ளியிலையைக் கொண்டுவந்து உரலிலிட்டுதுவை த்து பிழிந்தசாறு படி (காலே அரிக்கால்) பசும்பால்படி (கா லேஅரிக்கால்) இவைரெண்டையுஞ்சேர்த்து நாள் ஒன்றுக்கு ஆழாக்குவீதம் காலையில்மூன்றுநாள் கொடுத்துவர குணமா கும், இச்சாபத்தியம்.

சூதகத்தை கிரமமாக வுண்டாக்க.

வெங்காரத்தூள்-எ௦, குண்டுமணியிடையும், கிராம்புத் தயிலம் ஒருதுளியும், வாலேந்திரபௌலம் ௬ - குண்டுமணியி டையும், குங்குமப்பூ-௧௦, குண்டுமணியிடையும், இவைகளை சேர்த்து அரைத்து நாள்லொன்றுக்கு துவரைப்பிரமாணம்ஒரு தடவை அல்லது இரண்டுதடவைகொடுக்க குணமாகும்.

சூதகவாயுசூசிகவாயு இவைகளுக்கு.

குப்பைமேனி,பொற்றலைக்கரிப்பான், சிறுசெருப்படை, லவாகைவேர் இவைகளைக்கொண்டுவந்து உலர்த்திவகைக்கு விராகனிடை-௫, சேர்த்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு திருகடிவீதம் தேனில்குழைத்து - ௨0- நாள் சாப்பிட்டுவர குணமாகும், இச்சாபத்தியம்.

சூதகவலிக்கு.

துத்தியிலை, வெள்ளைப்பூண்டு,மிளகு,வகைக்குப்பலம்-௧, வசம்பு, விராகனிடை - ௧, இவைகளை ஜலம்விட்டு அரைத்து மூன்று பங்காக்கி மாதாந்திர ருதுகாலமாகிய நாளில்-௩-நா ளும் காலையில் ஒருபாகங்கொடுக்க குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகளுக்குக் காணும் துவாலைக்கு.

நெய்தற்கிழங்கு, அதிமதுரம், சந்தணம், வெள்ளிலோத்திரம் இவைகள் வகைக்கு விராகனிடை - ௨, சேர்த்து ஜலம் விட்டரைத்து ௩-பங்குசெய்து ஒருபங்குவீதம் பச்சரிசிகழுநீரில்கலக்கி காலையில்மூன்றுநாள் கொடுக்க குணமாகும்.

துவாலையால்காணும் தாகமூர்ச்சைக்கு.

அரசன்கொழுந்து, ஆலன்கொழுந்து, மாயிலைக்கொழுந்து, அத்தியிலைக்கொழுந்து இவைகள்வகைக்கு அவுன்சு-௧, சேர்த்து ஒருபடி ஜலம்வைத்து அரைப்படியாக வற்றக்காய்ச்சி யிரைக்கி வடித்து வ-சேர்வீதங்கொடுக்க குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகள் சுரத்திற்கு.

சிற்றுமுட்டிவேர், பேருமுட்டிவேர், சீந்திற்கொடி, திப்பிலி, சுக்கு, நிலவேம்பு, இவைகள் வகைக்குவிராகனிடை-௧, ஒருபடிஜலத்தில் பொடித்துப்போட்டு அரைப்படியாகவற்றக்காய்ச்சிய கஷாயத்தில் வ-சேர்வீதம் நாளொன்றுக்கு இரண்டுதடவை கொடுத்துவர குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகளின் நீர்சுரப்புக்கு.

நன்னாரிவேர் அல்லது ரோஜாப்பூ இவைகளில் ஒன்றில் விராகனிடை-௩, எடுத்து அரைப்படிஜலத்தில்போட்டு கால்படியாக கஷாயமிறக்கி-௩-நாள்கொடுத்துவர குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகளின் கல்லடைப்பிற்கு.

மாதுளம்பழத்து விதையைக் கொண்டுவந்து பசும்பால் விட்டு அரைத்துக்கரைத்து அறைஅவுன்சுவீதங் கொடுத்துவர குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகளுக்கு 10-மாதங்களில்வரும் கெர்ப்பவலிகளுக்கு.

1-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

தாமரைப்பூ, சந்தணம், விலாமிச்சுவேர் வகைக்கு விராகனிடை-உ, எடுத்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவு வீதம் பசும்பாலில் கலக்கிக்கொடுக்க வலிதீரும்.

2-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

தக்கோலம், தாமரைப்பூவும் வகைக்கு விராகனிடை-ரு, சேர்த்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவுவீதம் பசும்பாலில் கொடுத்துவர தீரும்.

3-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

வெண்தாமரைப்பூ, செங்கழுணிநீர்க் கிழங்கும் வகைக்கு விராகனிடை-உ, சேர்த்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கிக்கொடுத்துவர வலிதீரும்.

4-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

நெய்தற் கிழங்கும், நொச்சிவேரும் வகைக்கு விராகனிடை-ங, சேர்த்து பசும்பால்விட்டரைத்து பாக்களவு பசும்பாலில்கொடுக்க வலிதீரும்.

5-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

ஆம்பற்பூவும், விலாமிச்சுவேரும் வகைக்கு விராகனிடை ங, சேர்த்து பசும்பால்விட்டரைத்து பாக்களவுவீதம் பசும்பாலில் கலக்கிச் சாப்பிட்டுவர வலிதீரும்.

6-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

திப்பிலி, திராக்ஷை, நெய்தற்கிழங்குவகைக்கு விராகனிடை-உ, சேர்த்துஅரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கிக் கொடுத்துவர வலிதீரும்.

7-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

விலாமிச்சுவேர், சந்தணம், தக்கோலம் வகைக்கு விராகநிடை-க, சேர்த்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவுபசும்பாலில் கலந்துக்கொடுத்துவர வலிதீரும்.

8-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

தாமரைப்பூ, நெய்தற்கிழங்கு வகைக்கு விராகநிடை-உ, சேர்த்து அரைத்து பாக்களவுபசும்பாலில் கலக்கிக்கொடுக்க வலிதீரும்.

9-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

அரசம்பட்டை, மருதம்பட்டை வகைக்கு விராகனிடை ௩, சேர்த்து அரைத்து பாக்களவுவீதம் பசும்பாலில் கலக்கிக் கொடுத்துவர வலிதீரும்.

10-வது. மாதத்திற்காணும் வலிகளுக்கு.

சர்க்கரையும், இலுப்பைப்பூவும் வகைக்கு விராகனிடை உ, சேர்த்து அரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கிக்கொடுத்துவர வலிதீரும்.

வயற்றில்பிள்ளை பிழைத்திருப்பதுதெரிய.

வயற்றில் பசும்வெண்ணெயைத் தடவ அது உருகினல் பிள்ளை பிழைத்திருக்கின்றதென்று அரியவும், வெண்ணெய் உருகாவிட்டால் இறந்ததென்று அரிந்துக்கொள்ளவும்.

வயற்றில் இரந்தபிள்ளைவிழ.

நிலக்குமிழம்பட்டையை ஜலம்விட்டு அரைத்துசுண்டக்காய்ப்பிரமாணங் கொடுக்க வயிற்றிலிறந்த பிள்ளைவிழும்.

இதுவுமது.

உத்தாமணிவேர் விராகனிடை-அரை, யெடுத்து அம்மியில்வைத்து அரைத்து பசும்பாலில்கலக்கிக்கொடுக்க பிள்ளை விழும்.

இரத்தபிள்ளைவிழ பூசுமருந்து.

பிரண்டைவேரும், குரிஞ்சாவேரும் வகைக்கு விராகனிடை-ரு, சேர்த்து ஜலம்விட்டு அரைத்து வயற்றின்மீது பூச விழும்.

நஞ்சுக்கொடிவிழ.

கருவேப்பிலை, வேப்பங் கொழுந்து, முருங்கைக் கீரைக் கொழுந்து இவைகளில் வகைக்கு அவுன்சு-க, சேர்த்து அத்துடன் ஒருகடுக்காய் நொருக்கிச்சேர்த்து ஒருபடி ஜலத்தில் கரைத்து அடுப்பேற்றி காய்ச்சி அரிக்கால் படியாய் வற்றினபின் வடித்துக்கொடுக்க விழும்.

பிரசவித்த ஸ்திரீயின்சுவாசம் தீர உருண்டை.

முருங்கைப்பட்டை, கழற்சிப்பருப்பு,பனவெல்லம்வகைக்கு விராகனிடை - க, சேர்த்து மைபோல் அரைத்து பாக்களவுகொடுத்துவர சுவாசந்திரும்.

இதுவுமது.

சந்தணம்	முல்லைவேர்
அதிமதுரம்	கோரைக்கிழங்கு
கோஷ்டம்	விலாமிச்சுவேர்
சாஸ்திரபேதி	வெட்டிவேர்
தக்கோலம்	நெல்லிப்பருப்பு

இவைகள் வகைக்கு விராகனிடை-ரு, சேர்த்து இளநீர் ஜலத்தாலரைத்து சுண்டைக்காயளவாக மாத்திரைகளாக்கி உலர்த்திவைத்துக்கொண்டு ஒருமாத்திரைவீதம் வென்னீரில் கரைத்து ௰உ-நாள் கொடுத்துவரத்தீரும், பத்தியமில்லை.

பிரசவித்தஸ்திரீகளுக்கு கீழ்வயறு - மார்பு - சிரசு இவைகளின் குத்தல் நோவிற்கு.

ஏலம்	சுக்கு
மிளகு	திப்பிலி
லவுங்கப்பத்திரி	லவுங்கப்பட்டை

வகைக்கு விராகநிடை-உ, இவைகளை சூரணித்து வைத்துக்கொண்டு-உ-விராகநிடைவீதம் பெடுத்து வெல்லத்திலாகிலும்அல்லது கழுநீர்ஜலத்திலாவது சேர்த்துக்கொடுக்க மேற்கூரிய் வியாதி குணமாகும்.

பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால்சுரக்க.

தோல்நீக்கின வெள்ளைப்பூண்டு-ரு, விராகநிடை எடுத்து உ-சேர்பாலில் வேகவைத்துக்கடைந்து அத்துடன் யேலரிசிதூள் விராகனிடை -க, சீனிவிராகனிடை-ரு, சேர்த்து பாயசம்போல்செய்து தினம் காலையில் அ-மணிக்குக்கொடுத்து-ரு-ச-மணிநேரஞ் சென்றபிறகு போஜனஞ்செய்யவும் பால்உண்டாகும்.

இதுவுமது.

பார்லி அரிசியைக் கொண்டுவந்து கஞ்சிகாய்ச்சிக்கொடுத்துவர பால்சுரக்கும்.

இதுவுமது.

சிற்றுமணக்கு யிலையைக்கொண்டுவந்து வதக்கி மார்பில் போட பால்சுரக்கும்.

பால்வரண்டுபோக.

மல்லிகைப்பூவாகிலும், அல்லது கோழிக்கீரையாகிலும் வதைக்கிக்கட்ட பால்வரண்டுபோகும். தொந்தரவிராது.

மூலைக்காம்பு ரணமாற பத்து.

வெங்காரம் வ - அவுன்சு, சாராயம்-உ-அவுன்சு, ஜலம் மூணேமுக்காலு அவுன்சு இவைகளைச்சேர்த்து அதில் துணியை நனைத்து ரணத்தின் மேல்போட - உ - ந-நாளில் ரிணம் ஆறும்.

ஸ்தன்னியகட்டிக்கு பத்து.

நவாக்ஷாரம் அவுன்சு (அரிக்கால்) பன்னீர்பயின்ட் (க) இவை ரெண்டுஞ்சேர்த்து அதில் துணியை நனைத்து கட்டியின்மேல் போட்டுவர குணமாகும்.

குழந்தைகளின்

சுரமாந்தத்திற்கு.

குட்டிவிளாயிலை, வெள்ளைப்பூண்டு, அவுரியிலை இந்தமூன்றுதினுசும் வகைக்கு அவுன்சு-க, சேர்த்துவெதுப்பிக்கஷாயஞ்செய்து ஒருபாலடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

ஊதுமாந்தத்திற்கு.

வேலிப்பரித்தியிலையை வதைக்கிபிழிந்த சாறு அவுன்சு க, சீரகம் கடுகுரோகணி இவைரெண்டும் வகைக்கு அவுன்சு வ, சேர்த்து அரைத்துப் பிழிந்தசாற்றில் அரைப்பாலடை முலைப்பாலுடன் கலந்துகொடுக்க குணமாகும்.

விஷமாந்தத்திற்கு.

நுணுவேர்	பொடுதலை
நொச்சிவேர்	வெள்ளைப்பூண்டு
வேளைவேர்	வசம்பு
ஓமம்	

இவைகள் வகைக்கு விராகநிடை-க, சேர்த்து நொரிக்கி வெதுப்பி ஒழக்கு ஜலம்வைத்து அதில்போட்டு ஆழாக்காய் வற்றக்காய்ச்சிவடித்து ஒரு பாலடைவீதம் கொடுக்க குணமாகும்.

நீர்மாந்தத்திற்கு.

மூக்கரட்டை வெங்காயம் இவைகளின் சாறுபடி அரிக்கால், ஆமணக்கெண்ணெய்படி அரிக்கால், சேர்த்துக்காய்ச்சிவடித்து ஒருபாலடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

பால்மாந்தத்திற்கு.

வெள்ளைப்பூண்டு, மிளகு, வசம்பு, இந்துப்பு, பொடுதலைக்காய் இவைகள்வகைக்கு-ந-ம-குன்றிமணியிடை சேர்த்து

நொரிக்கி வெதுப்பி ஓழக்கு ஜலத்தில்போட்டு ஆழாக்காய்க் கஷாயஞ்செய்து ஒருபாலடைவிதம் கொடுத்துவர பால்மாந்தம் குணமாகும்.

செரியாமாந்தத்திற்கு.

வசம்பு	மிளகு
சடாமாஞ்சில்	வெள்ளைப்பூண்டு
ஓமம்	கருஞ்சீரகம்
சுக்கு	ஆமைஓடு

இவைகள் வகைக்கு விராகனிடை-க, சேர்த்து நொரிக்கி அரைபடி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்கஷாயஞ்செய்து ஒருபாலடைவிதம் கொடுத்துவர செரியாமாந்தம் குணமாகும்.

சுழியாந்தத்திற்கு.

இண்டின்சாறு, வெங்காயச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்கு அவுன்சு-உ, சேர்த்து யெரித்து வடித்து ஒருபாலடைவிதம் கொடுத்துவர குணமாகும்.

இதுவுமது.

சுக்கு, கழற்சிப் பருப்பு, மஞ்சள், ஓற்றத்தலைப் பூண்டு பெருங்காயம் வகைக்கு விராகனிடை-க, சேர்த்து முலைப்பாலால் அரைத்து அரைசேர்வேப்பெண்ணெயிற்கலந்து காய்ச்சிவடித்து ஒருவிராகனிடைவிதம் முலைப்பாலில்சேர்த்து கொடுத்துவர சுழியாந்தம் குணமாகும்.

தலைமாந்தத்திற்கு.

வெள்ளெருகு, வெதுப்படக்கி, வேலிப்பரித்தி, பெருந்தும்பை இவைகளின்சாறு வகைக்கு அவுன்சு - க, சேர்த்து அதில்திப்பிலி, வசம்பு, பூண்டு, சதகுப்பை, தேசாவரம்வகைக்கு அவுன்சு (அரிக்கால்) சேர்த்தரைத்து சாற்றில் கலக்கி ஒருபாலடைவிதம் கொடுத்துவர குணமாகும்.

மாந்தம் 8-க்கும் விபரம்.

மேற்சொல்லிய 8-வித மாந்தரோகங்கள் தவிர வயருப்பினால் உப்புமாந்தமென்றும், மலங்கட்டினால் கட்டுவாந்தமென்றும், கண்சொரிகினால் சொரிகிமாந்தமென்றும், வாதமதிகமானால் வாதமாந்தமென்றும், பித்தமதிகரித்தால் பித்தமாந்தமென்றும், சிலேஷ்மமாந்தமென்றும், இழுப்புமாந்த மென்றும், சன்னிமாந்த மென்றும், பலவாராக சொல்லுவார்கள். ஆகையால் ரோகங்களின் லக்ஷணங்களை அறிந்து மருந்துகளைச்சேர்த்து கொடுக்கவேண்டியது, மேற்கூறிய மாந்தங்களுக்கு இச்சாபத்தியம்.

மாந்தம் 8 - க்கும்.

முருங்கைப்பட்டைச்சாறு படி-க, நல்லெண்ணைபடி-உ, இவைரெண்டுஞ் சேர்த்து அதில் வசம்பின் சாம்பல் விராகனிடை-உ, வெள்ளைப்பூண்டுவிராகனிடை-க, இவைகளை பசும்பால்விட்டரைத்து மேற்படி சாற்றில் கரைத்து அடுப்பேற்றியெரித்து வடித்துவைத்துக்கொண்டு ஒருபாலடைவிதங்கொடுக்க மாந்தம்-அ-ம் தீரும், இச்சாபத்தியம்.

மாந்தவலிப்புக்கு.

குப்பைமேனிச்சாறு, முடக்கத்தான்யிலைச்சாறு, மூக்கரச்சாரணைச் சமூலச்சாறு வகைக்கு அவுன்சு - க, ஆமணக்கெண்ணை அவுன்சு-க, கூடச்சேர்த்து அடுப்பேற்றிக் காச்சிவடித்து ஒருபாலடைவிதம் கொடுத்துவரக்குணமாகும், இச்சாபத்தியம்.

வயற்றுப்பொருமல் மாந்தத்திற்கு.

குப்பைமேனி வேர்ப்பட்டை பலம் - ச, வறுத்த ஓமம் விராகனிடை-உ, இவைகளை அரைபடி ஜலத்தில்போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி கஷாயமாக்கிவடித்து ஒருபாலடைவிதம் கொடுத்துவர குணமாகும், இச்சாபத்தியம்.

இதுவுமது.

ஓமம், வசம்பு, வகைக்கு (அரிக்கால்) அவுன்சு யெடுத்து இளம்வறுப்பாய் வறுத்து வைத்துக்கொண்டு வேலிப்பரித்தி

யிலையைவதக்கி எடுத்தசாற்றில் ஒருசிட்டிக்கை சூரணத்தை ப்போட்டு ஒருபாலடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

கருங்கிரந்திக்கு.

ஆமணக்கெண்ணெ, கருங்கழுதைதலத்திச்சாறு, ஆவுரியி லைச்சாறு, இவைகள்வகைக்குப்படி (அரைக்கால்) சேர்த்து அதில் வசம்பு வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை-க, பொடித்துப்போட்டு அடுப்பேற்றி யெரித்துவடித்து, ஒருபா லடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

இதுவுமது.

ஒருபாலடை கழுதைப்பாலில்-உ-ரு-துளி ஓணான் ரத்த த்தைவிட்டுக் கொடுக்க குணமாகும், ஆனால் தாயார்கடும்பத் தியமாக யிருக்கவேண்டும்.

செங்கிரந்தி.

முருங்கையிலைச்சாற்றைமுரித்து ஒருபாலடைகொடுக்க குணமாகும், அல்லது முலைப்பாலில் கோரோசனையை உ-ரு உரைவுரைத்துக் கொடுக்கக் குணமாகும் இச்சாபத்தியம்.

கிரந்தி ஒன்பதிற்கும்.

செம்பரித்தியெண்ணெ, செம்பரித்திச்சாறு, தேங்காய்ப் பால், ஆமணக்கெண்ணெ வகைக்குப்படி க, சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சுத்திசெய்தரசகர்ப் பூரம் வகைக்குவிராகனிடை-க, சேர்த்து மேற்படி தேங்கா ய்ப்பாலிலரைத்து யெண்ணெயிற்கரைத்து அடுப்பேற்றி பத மாகக்காய்ச்சிவடித்து வைத்துக்கொண்டு ஒரு விராகநிடை வீதம் கொடுத்துவரகுணமாகும். ஆனவிந்தயெண்ணெ சூலைப தினெட்டுக்கும் கொடுக்கலாம், இச்சாபத்தியம்.

சுரத்திற்கு.

கீழ்க்காநெல்லிச்சாறு, பாதரிவேர்ச்சார் இவைகள்வகை க்கு அரிக்கால் அவுன்சுசேர்த்து முலைப்பால் கால் அவுன்சில் சேர்த்துக்கொடுத்துவர சுரம் நிவர்த்தியாகும்.

தோஷம் 9-க்கும் மாத்திரை.

மஞ்சள்	முத்தக்காசு
வசம்பு	தேவதாரம்
அதிமதுரம்	கடுக்காய்

வகைக்குவிராகநிடை-உ, சூரணித்து பொடுதலைச் சாற்றுலரைத்து பரித்திவிதை அளவாகமாத்திரைகளாக்கிஉலர்த்திவைத்துக் கொள்ளவும், ஒருமாத்திரைவீதம் தேனிலாவது முலைப்பாலிலாவது உரைத்துக்கொடுக்க குணமாகும், இச்சாபத்தியம்.

அதிசாரபேதிக்கு.

ஒரு ஜாதிக்காயைத் தொளைத்து அதினுள் ஒரு குண்டுமணியிடை அபினியைவைத்து மஞ்சளை அரைத்துஅதற்குக் கவசமிட்டு புடம்போட்டு வெந்தவுடனே மஞ்சளைநீக்கி முலைப்பால் விட்டு கல்வத்தில்போட்டு ஒருமணிநேரம் அரைத்து கடுகுபிரமாணம் மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். அதில் ஒரு மாத்திரைவீதம் முலைப்பாலில் உரைத்துக் கொடுத்துவர குணமாகும், ஆனால் அதிகமாகக் கொடுத்தால் மயக்கங்காணும் கெடுதிநேரிடும்.

சீத்பேதிக்கு.

வில்வப்பழத்து ஓடு சதையுடன் உலர்ந்ததை நெரிக்கி ஜலத்தில்போட்டு, காச்சினகஷாயத்தில் ஒரு அவுன்சுவீதம் கொடுத்துவர குணமாகும்.

கால்கடுவனுக்கும் மண்டைக்கடுவனுக்கும்.

ஆமணக்கெண்ணெய் படி-வ		வெங்காயம் விராகனிடை-ரு		
வசம்பு விராகனிடை-ரு		இலுப்பைப்பட்டை	,,	ரு
சதுரகள்ளிப்பட்டை	,, ரு	பாலப்பட்டை	,,	ரு

இதை ஜலம்விட்டரைத்து ஷடி பெண்ணெயில்கரைத்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு ஒருபாலடைவீதம் ரெண்டுநாள் கொடுக்கக் குணமாகும், இச்சாபத்தியம்.

வயருப்பல் மந்தத்திற்கு.

உப்பை வருத்துக்கொட்டின ஒருசட்டியில் ரு - விராகனிடை வேளைப்பூண்டைப்போட்டு வருத்து சிவக்கும்போது உ0-விராகனிடை ஓமத்தைச்சேர்த்து வருத்து அரைபடி ஜலம்விட்டுக்கால்படியாக வற்றக்காய்ச்சி அதில்-வ-விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து - உ-ங-பாலடைவீதம் கொடுத்துவர குணமாகும், இச்சாபத்தியம்.

சிரங்குகள் ஆர.

சந்தனம் நீர்வெடிமுத்து வகைக்கு-ரு-விராகனிடை சேர்த்து ஜலம்விட்டரைத்து சிரங்குகளின்மீது பூசிவர குணமாகும்.

வயற்றுப்பலுக்கு.

நுணாயிலை	ஒருபிடி	சுக்கு	விராகனிடை-உ
ஓமம்	விராகனிடை-உ	வேப்பிலை	,, உ
மிளகு	,, உ		

இவைகளில் நுணாயிலையும், வேப்பிலையும் சட்டியிற்போட்டுவருத்து சிவக்கும்போது மற்றவைகளையும் பொடித்துப்போட்டு ஒருபடி ஜலம்விட்டுக் கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து அதில் நாலுபாலடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

தொப்புள் புண்ணுக்கு.

வருத்தசீனாகாரத்தைக் கொண்டுவந்து பொடித்து தொப்புளின்மேல் போட்டுவர குணமாகும்.

இருமலுக்கும் ரத்தம்விழுதலுக்கும்.

கால்படி கோதுமையைக் கொண்டுவந்து ஒருபடி ஜலத்தில் ஊரப்போட்டு ஊறினபின்பெடுத்து மைபோல்அரைத்து அந்த ஜலத்தில் கரைத்து வடித்துக் காய்ச்சி கால் சேராக்கி சீனிசக்கரை சேர்-க, சேர்ந்து சுண்டக்காய்ச்சி புன்னக்காயளவு தினம்-உ-தடவை கொடுத்துவர குணமாகும்.

வயற்றில் எண்ணெய் தங்கினால்.

வெந்தயமும் ஜலமும் சேர்த்து கஷாயமிட்டுக்கொடுக்கத்தீரும், அல்லது நாயுருவிவேரும் ஜலமுஞ்சேர்த்து கஷாயமிட்டுக் கொடுக்கத்தீரும், அல்லதுஆமணக்கு வேரும் ஜலமும் சேர்த்துக்கொடுக்க யெண்ணெய்கழியும், ஒரு விராகனிடை வேருக்கு கால்படிஜலம்வைத்துக் கஷாயமிடவேண்டும்.

சாம்பல் மண் தின்னால் அதற்கு.

கத்தரிக்காயில் சார்பிழிந்து அதில் பெருங்காயம் சிறுபயரளவு உரைத்து ஒருபாலடைகொடுக்க குணமாகும். அல்லது முள்ளங்கிச்சாற்றில் மேற்சொன்னபடி பெருங்காயத்தை உரைத்து ஒருபாலடைகொடுத்துவர சாம்பல் மண்கழியும் குணமாகும்

பால்உண்ணாவிடில்.

அதிமதுரத்தை முலைப்பாலில்உரைத்து முலைக் காம்பிற் குத்தடவி குழந்தைவாயில்வைத்துக்குடிக்கச்செய்விக்கபால் குடிக்கும்.

குடித்தபாலைக்கக்கினால்.

வெள்ளைப்பூண்டும் ஓமமும் வகைக்கு விராகனிடை-க, சேர்த்து ஆழாக்குசலம்வைத்து அரையாழாக்காய் கஷாயமிட்டு ஒருபாலடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

வாந்தியை நிருத்த.

நன்னாரிவேர்ப் பட்டைச்சாற்றில் மயிலிரகுசாம்பல் அல்லது மிளகு வசம்பு இவைகளின் சாம்பலைச் சேர்த்துக் கொடுக்கருணமாகும் இவைகளை சுட்டுசாம்பலாக்கிக்கொள்ளவும்.

ஜலுப்புக்குகியாழம்.

தூதுளைக்கொண்டுவந்து சார்பிழிந்து ஒருபாலடை வீதம் கொடுக்கத் தீரும். அல்லது துளசி யிலையைக் கொண்டுவந்து புட்டுவைத்து ஒருபாலடை உள்ளுக்குக் கொடுக்கத்தீரும்.

ஜலுப்பிற்கு பத்து.

வெற்றிலைச்சாற்றில்-வ-விராகநிடை குங்குமம்சேர்த்துக் கொதிக்கவைத்து மூக்கு புருவம்முதலிய இடங்களிற் பற்றுப்போடகுணமாகும் அல்லது ஜாதிக்காயை ஜலம் விட்டரைத்து சுடவைத்துப் பற்றுப்போட ஜலுப்புத்தீரும்.

பேதியை நிருத்த.

மஞ்சள் சிறுநாகப்பூ
கடுக்காய்ப்பூ போஸ்தக்காய்
அதிவிடையம்

இவைகள் வகைக்குப்பலம்-க, ஜடாமாஞ்சில் பலம் - வ, இவைகளை சூரணித்து அரைப்படிகொதிக்குஞ்சலத்தில்போட்டு-ரு-மணிநேரம் ஊரவைத்து வடித்துக்கொண்டு - உ-பாலடைவீதம்-ரு-சு - மணிநேரத்திற் கொருவிசை கொடுத்துவர பேதிநிற்கும்.

பேதியுண்டாக.

சிற்றாமணக் கெண்ணெயும் முலைப்பாலும் சமமாகச் சேர்த்து இரண்டையும் நன்றாய்க்கலந்து ஒருபாலடை அல்லது ஒண்ணரை பாலடைகொடுக்க மலமிரங்கும். அல்லது நாட்டுக்காட்டாமணக்குச் சாறுபிழிந்து ஒருபாலடைகொடுக்கபேதியாகும்.

கக்குவான்தீர நெய்.

மீன்முள்ளு, எலிச்சதை, நத்தைச்சதை, வேங்கைப்புலியின்கண்டத்தோல் இவைகளில் எதையாகிலும்-வ-பலம், எடுத்து-ரு-பலம், பசும்நெய்யில்போட்டுக் காய்ச்சிவடித்துக்கொண்டு-ந-ஃ-விராகனிடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

இதுவுமது.

மிளகு மயிலிரகு இவைகளின் சாம்பலை சமமாகச் சேர்த்து விராகனிடைவீதம் பசும்நெய்யில் கொடுக்க கக்குவான் தீரும்.

வாய்ரிணத்திற்குபூசுமருந்து.

௰-குண்டுமெணியிடை படிகாரத்தூள் ஒருஅவுன்சுதேன் சேர்த்து குழைத்து காலை மாலை குழந்தையின் வாய்ரிணத்திற்கு தடவிவர குணமாகும், அல்லது பசும்நெய்யில்கோரோசனையை உரைத்து வாய் ரணத்திற்குத் தடவிவர ரெணமானது ஆறும்.

நீர்க்கட்டுக்கு.

வெங்காரத்தைப்பொரித்து அரைகுண்டுமெணி யிடைமுதல் உ-குண்டுமெணி வரைக்கும் வயதுக்குத்தக்கபடி முலைப்பாலிற்கொடுக்க நீர் இரங்கும் குணமாகும்.

அண்ட வீக்கத்திற்கு.

கழற்சிப்பருப்பு	சாரணைவேர்
சுக்கு	முடக்கொத்தான்வேர்

இவைகள் வகைக்கு அவுன்சு-க, யெடுத்துப்பொடித்து ௰உ-அவுன்சு ஜலத்தில்போட்டு சு-அவுன்சுகஷாயமாகும்படி யெரித்து வடித்து ஒருபாலடைவீதம் தினம்ரெண்டுதடவை கொடுக்க குணமாகும்.

அண்டவீக்கத்திற்குக்கட்டு.

சிற்றாமணக்கெண்ணெயும் சிற்றாமணக்குயிலையும்வதைக் கிக்கட்ட குணமாகும்.

சகல சுரங்களுக்கும் குளிர் சுரத்திற்கும் மாத்திரை.

மிளகு விராகனிடை ஒண்ணே அரிக்கால் பெருங்காயம் அரையேவீசம் விராகனிடை கழர்ச்சிப்பருப்பு மூணேவீச விராகனிடை இவைகளைச்சேர்த்து தேன் போதுமானவரைக் கும் விட்டு மைபோல் அரைத்து ௩௰-மாத்திரைகளாக்கி பெரியவர்களுக்கு உ-மாத்திரையும், சிரியவர்களுக்கு-க - மாத்திரையும், தினம்-உ-௩-தடவை கொடுத்துவர சுரந்தீரும்.

விஷசுரத்திற்குக் கியாழம்.

நிலவேம்பு	சீந்திற்கொடி
பேய்ப்புடல்	சுக்கு
வேப்பம்பட்டை	கடுக்காய்

இவைகள் வகைக்கு விராகனிடை - ரு, பொடித்து ஒரு படிஜலத்தில்போட்டு அடுப்பேற்றி யெரித்து காலில் ஒன்றுக்கி கால் ஆழாக்குவீதம் கொடுத்துவர விஷசுரந்தீரும்.

பழயசுரத்திற்குக் கியாழம்.

பற்பாடகம்	ஆடாதோடை
சிறுதேக்கு	முத்தக்காசு
கோஷ்டம்	நிலவேம்பு
சீந்திற்கொடி	சுக்கு
திப்பிலி	சிருகாஞ்சொரி

இவைகள் வகைக்கு விராகனிடை-ரு, சேர்த்துப்பொடித்து நாலுபடி ஜலத்தில்போட்டு அடுப்பேற்றி யெரித்து ஒரு படியாக்கி வீசம்படி வீதம் கொடுத்துவர பழயசுரந் தீரும், இச்சாபத்தியம்.

அஸ்திசுரத்திற்குச் சூரணம்.

தாளிசப்பத்திரி	பலம்	உ	சீரகம்	பலம்	வ
ஏலம்	,,	வ	திப்பிலி	,,	வ
கிராம்பு	,,	வ	கோஷ்டம்	,,	வ
ஜாதிக்காய்	,,	வ	அக்கிராகாரம்	,,	வ
ஜாபத்திரி	,,	வ	கடுக்காய்	,,	வ
வால்மிளகு	,,	வ	தானிக்காய்	,,	வ
லவங்கப்பட்டை	,,	வ	நெல்லிவற்றல்	,,	வ
வாய்விளங்கம்	,,	வ	சடாமாஞ்சில்	,,	வ
மல்லி	,,	வ	சோம்பு	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து இளம்வறுப்பாய் வறுத்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன்-ரு-பலம் சீனியைச்சேர்த்து வைத்துக்கொண்டு தினம் காலை மாலை இரண்டு வேளையும் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர அஸ்திசுரம்அஸ்திவெட்டை தீரும், இச்சாபத்தியம்.

அசாத்திய சுரத்திற்குக் கியாழம்.

தேவதாரம் சுக்கு கொத்தமல்லி வகைக்கு விராகனிடை-ய, நிருத்தெடுத்து பொடித்து ஒருபடிஜலத்தில்போட்டு அடுப்பேற்றி யெரித்து கால்படியாய் வற்றினபின் வடித்து அதில் நாலிலொருபாகம் தினம்காலைமாலை இரண்டுதடவை கொடுத்துவர தீரும், இச்சாபத்தியம்.

அதிசாரசுரத்திற்குக் கியாழம்.

வில்வப்பழச்சதை, நிலவேம்பு, முத்தக்காசு, மாம்பட்டை, சுக்கு, பெருமரத்துப்பட்டை வகைக்குவிராகனிடை-ய, நிறுத்தெடுத்து பொடித்து இரண்டுபடி ஜலத்தில் போட்டு அரைபடியாய் வற்றக்காய்ச்சி வடித்து நாளொன்றுக்குவீசம் படிவீதம் கொடுத்துவர அதிசாரசுரம்தீரும், இச்சாபத்தியம்.

நடுக்கல் சுரத்திற்குக் கியாழம்.

சுக்கு	பற்பாடகம்
கோஷ்டம்	குமிழ்வேர்

தேவதாரம்	சிறுதேக்கு
கடுக்காய்	கண்டங்கத்திரி

இவைகள் வகைக்கு விராகனிடை - ரு, நிறுத்தெடுத்து பொடித்து க-படி-ஜலத்தில்போட்டு ஹ-படியாகும்படி வற்றக்காய்ச்சி கொடுக்கத் தீரும், இச்சாபத்தியம்.

இதுவுமது.

மிளகுவிராகனிடை-ரு, எடுத்து நெய்யில்வருத்து பொடித்து கால்படி ஜலத்தில்போட்டு வீசம்படியாய் வற்றக்காய்ச்சிக் கொடுக்கக் குணமாகும்.

அஜீர்ண சுரத்திற்குக் கியாழம்.

சுக்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், பேருமுட்டி, சிற்றுமுட்டி வகைக்குவிராகனிடை-கஉ, நிறுத்து யெடுத்துப்பொடித்து அரைபடி ஜலத்தில்போட்டு கால்படியாய்வற்றக்காய்ச்சி இருவேளை கொடுத்துவர அஜீர்ணசுரந் தீரும், இச்சாபத்தியம்.

விடாசுரத்திற்கு.

மிளகு விராகனிடை-உ, அவுரிவேர் விராகனிடை - கஉ, இவைகளை அரைத்து வென்னீரில்கலக்கி அதில் அரைபலம் இடை சுண்ணும்பைப்போட்டு மிசிரித்துக்கொடுத்துவாகுணமாகும், இச்சாபத்தியம்.

வாதசுரத்திற்குக் கியாழம்.

சுக்கு, கிராம்பு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கொத்துமல்லிவிதை வகைக்கு விராகனிடை-ரு, பேய்ப்புடல்விராகனிடை - உல, இவைகளை நிறுத்தெடுத்துப் பொடித்துஜலத்தில் போட்டுக் காய்ச்சி கஷாயஞ்செய்து அத்துடன் கொஞ்சம் தேன்விட்டு - உ - அவுன்சு வீதம் காலை மாலை கொடுத்துவர தீரும்.

சிலேஷ்ம சுரத்திற்குக் கியாழம்.

செம்முள்ளி தூதுளை
சுண்டை கண்டங்கத்திரி

இவைகளின்வேர்கள் சுக்கு வகைக்கு விராகனிடை - சு, நிருத்தெடுத்துப் பொடித்து உ-படி ஜலத்திற்போட்டு கால் படியாய் வற்றக்காய்ச்சிவடித்து அதில்வீசம்படிவீதம் தினம் காலைமாலை இரண்டுதடவை கொடுத்துவர குணமாகும், இச் சாபத்தியம்.

யானைக்கால் சுரத்திற்குக் கியாழம்.

சீந்திற்கொடி பலம்-க, கொண்டுவந்து அரைபடி ஜலத் தில்போட்டு கஷாயஞ்செய்து தினம் காலையில் சாப்பிட்டுவர நின்றுவிடும்.

ஊஷ்ணசுரத்திற்குக் கியாழம்.

ஒருஅவுன்சு வில்வவேர்பட்டையை ஒருஆழாக்கு ஜலத் தில்போட்டு-உ-ஆழாக்காகவற்றக்காய்ச்சி அரிக்கால் ஆழாக்கு வீதம் தினம்-உ-தடவை கொடுக்க உஷ்ணசுரம் குணமாகும், இச்சாபத்தியம்.

நேத்திர ரோகங்கள் கூசு-க்கும்

அஞ்சனம்.

சிறுகீரை, பூலா, பொன்னாங்காணி இவைகளின் வேர் துத்தம், துரிசி, திப்பிலி, புளியம்பூ, இவைகள் வகைக்கு விரா கனிடை - ரு, நிறுத்துச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோலரைத்து நீண்டமாத்திரைகள்செய்து உலர்த்தி வை த்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாற்றில் உரைத்துக் கண்க ளில்போட குணமாகும்.

கண்ணெரிவிற்கு
மிளகு அஞ்சனம்.

வெள்ளாட்டுப் பிச்சியைக்கொண்டுவந்து அதிலுள்ளநீர் வெளியே போகாமற்படிக்கு மிளகை அதினுள் கொண்டமட்டும் நிரைப்பி வாயைக்கட்டி நிழலில்தூக்கிட்டுக்கட்டிவைத்து மிளகு உலர்ந்தபிறகு யெடுத்து வைத்துக்கொண்டு ஒரு மிளகை ஜலம்விட்டு உரைத்து தினம் - உ - தடவை கண்ணிலிட குணமாகும், ஆனால் இதை க-மண்டலம் அல்லது அரைமண்டலம் இடவேண்டும்.

கண்ணோவுக்கு மருந்து.

கஉ-குண்டுமணியிடை படிகாரத்தை, க-அவுன்சு ஜலத்தில்போட்டுக் கரைத்து குழந்தையின் கண்ணோவுக்கு தினம் தினம்-ச-நி-தடவை கண்ணிலிட்டு கண்களைக்கழுவவும் அல்லது துணியைமடித்து நனைத்து கண்களின்மேல் போடவும் பெரியவர்களுக்கு அதிகமாய் சீனுகாரத்தைச் சேர்த்துக்கொண்டு ஜலத்தைக் கண்ணிலிட குணமாகும்.

கண்ணோவுக்கு ஒத்தடம்.

போஸ்தக்காயும் துத்தியிலையும் ஓர் அளவாக ஜலத்தில் போட்டு காய்ச்சி சுடசுட யெடுத்து ஒத்தடங்கொடுக்க குணமாகும்.

கண்குளர்ச்சிக்குமருந்து.

சிற்றாமணக்குவேர் பலம் - உ, கொண்டுவந்து அரைத்து அரைபடி பசும்பாலில் சேர்த்துக் காய்ச்சி புரைகுத்தி மறுநாள் காலையில் யெடுத்துக்கடைந்து அதில்வரும் வெண்ணையை யெடுத்து வைத்துக்கொண்டு கண்களில் தீட்டிவர கண்குளிர்ச்சியாகும்.

கண்றெப்பை வீக்கத்திற்கு ஒத்தடம்.

பசும்பாலைக்காய்ச்சி சுடசுட ஒத்தணம்கொடுக்கக் குணமாகும், அல்லது மிளகை ஜலம் விட்டு உரைத்து ரெப்பையின்மேல்போட குணமாகும், அல்லது சங்கை கரிவேப்பிலைச் சாற்றுல் உரைத்துத் தடவிவரகுணமாகும்.

கண்சிவப்பு பூவிழுதலுக்கு.

புளியன்கொட்டைதோல், தேற்ரும்விதை, கடுக்காய்த் தோல் வகைக்கு விராகநிடை - க, சேர்த்து மைபோல் அரைத்து துணியில் மூட்டைகட்டி பசும்பாலில் ஊரவைத்து கண்ணில் பிழிந்துவர குணமாகும்.

கண்படலம் எ-க்கும் பத்து.

க-பலம் வெள்ளைப்பூண்டை பசுவின்மூத்திரத்தில்அரைத்து இராத்திரியில் படுக்கைக்குப் போகும்பொழுது சிரசின் மேல்-எ-நாள் பத்துபோட குணமாகும், ஆனல் பெருங்காயத்தைநீக்கி இச்சாபத்தியமாக யிருக்கவேண்டும்.

வேறுமுறை அஞ்சனம்.

சமுத்திரத்திலுள்ள ஆமை ஓட்டை ஜலத்தில் போட்டு வேகவைத்து நிழலில்உலர்த்தி வைத்துக்கொண்டு பிறகுமுலைப்பாலில் உரைத்து கண்ணிலிட குணமாகும்.

கர்னரோகங்களுக்கு தைலங்கள்.

நிலப்பனங்கிழங்கைக் கொண்டுவந்து ரு°- விராகனிடை நிருத்தெடுத்து அரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும், பகல் நித்திரை நீக்கவும், இப்படி ஸ்நானஞ்செய்துவர கர்னநோய் உரு-ம்-தீரும், கர்னரோகமென்பது காது நோய்.

காதுநோயிற்கு முசுறுமுட்டை யெண்ணெய்.

குங்கிலியம்	கோழிமுட்டைமஞ்சட்கரு
வசம்பு	வெள்ளைப்பூண்டு
பூவரசன்காய்	நண்டிரைச்சி
முசுறுமுட்டை	

இவைகள் வகைக்குவிராகனிடை-உ, சிதைத்து கால்படி வேப்பெண்ணெயிற் சேர்த்து அடுப்பேற்றியெரித்து வடித்து ச-ரு - துளிகள்விட குணமாகும், முசுறுமுட்டை யென்பது ஓர்வித யெரிம்பின்முட்டை கடையில்கிடைக்கும்.

இதுவுமது.

வெங்காயம்	விராகனிடை	உ
வசம்பு	,,	உ
மஞ்சள்	,,	ச

இவைகளை பொடித்து ஒருபடிவேப்பெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி யெரித்துவடித்து வைத்துக்கொண்டு-ச-ரு துளி காதில்விட்டுவர காதுரோகங்கள்தீரும்.

காதில்வரும் சீழ்நிற்க யெண்ணெய்.

ஒருசேர் வேப்பெண்ணெயில் வசம்பு வெள்ளைப் பூண்டு பெருங்காயம் வகைக்கு விராகனிடை-க, சூரணித்துப் போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு காதில்-ரு-சு-துளிவிட்டுவர காதில்வரும் சீழ்நிற்குங்குணமாகும்.

இதுவுமது.

ஒருசேர்வேப்பெண்ணெயில் கால்சேர் வில்வப்பழச்சதையைப்போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ச-ரு-துளிவிட குணமாகும்.

காது இரைச்சல்தீர எண்ணெய்.

உஉ-அவுன்சு நல்லெண்ணெயில்-உ-அவுன்சு தைவேளைச் சாரைச் சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து காதில்-ரு சு-துளிவிட்டுவர காதிரைச்சல்தீரும்.

இதுவுமது.

முசுமுசுக்கையிலைச்சாறு படி (அரிக்கால்)நல்லெண்ணை படி (அரிக்கால்) இவைரெண்டையுஞ் சேர்த்து அதில் வெள்ளைப்பூண்டு விராகனிடை-ரு, எடுத்து ஷ சாற்றுலரைத்துக் கரைத்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு காதில்விட்டுவர இரைச்சல்நிற்கும்.

காதுமந்தம்தீர இஞ்சிச்சாறு.

முக்காலரிக்கா விராகனிடை இஞ்சிச்சாறும், ஒரு விராகனிடை குதிரைலெத்திச்சாறும், இவைரெண்டும்சேர்த்து சு-ரு-துளி விட்டுவர காதுமந்தம்தீரும்.

இதுவுமது.

உ-அவுன்சு புங்கம் பெண்ணையில் இரண்டே முக்கால் விராகனிடை பன்றிமுள்ளை சிதைத்துப்போட்டுஅடுப்பேற்றி யெரித்து வடித்துவைத்துக்கொண்டு அதைகாதில்விட்டு பஞ்சால்அடைத்து சு-நாள் வரையில் காற்றுப் புகாமல் வைத்து இருக்கக் குணமாகும்.

காதுப் புழுவு விழ.

முருங்கையிலைச்சாறு-ரு-அவுன்சு நல்லெண்ணை-சு-அவுன்சு இவைரெண்டுஞ்சேர்த்து அடுப்பேற்றியெரித்துவடித்து வைத்துக்கொண்டு காதில்விட்டுவர குணமாகும், புழு வெளியாகும்.

காதுயெகுக்ஷிதீர.

ஒரு அவுன்சு நல்லெண்ணையில் கிலுகிலுப்பை வேர்-உ-அவுன்சு அரைத்துப்போட்டு அடுப்பேற்றி யெரித்துவடித்து வைத்துக்கொண்டு ரு-சு-துளி காதில்விட்டுவரகாதுயெகுட்சிக்குணமாகும்.

காதுவலி தீர.

அபினிப்பாவன திராவகமும் தேங்கா யெண்ணெயும் சமனிடையாய்ச் சேர்த்து வைத்துக்கொண்டு ரு-சு-துளி காதில் விட்டுவர குணமாகும்.

சிரரோகங்களுக்கு வைத்தியம்.

ஒற்றைத் தலைநோய் தீர தைலம்.

இஞ்சிச்சாறும் நல்லெண்ணெயும் வகைக்கு அவுன்சு-சு-சேர்த்து அடுப்பேற்றி யெரித்துவடித்து ஸ்நானஞ் செய்து வர ஒற்றைத்தலைநோய் தீரும்.

இருபக்கத் தலைநோய்தீர தைலம்.

பேய்ப்புடல் சாறும் நல்லெண்ணெயும் வகைக்கு சேர்-க, சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

நீர்கொண்ட மண்டையிடிக்கு புகை.

கர்ப்பூரம், மிளகு, சதகுப்பை, கடுகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள் வகைக்கு விராகனிடை-உ-நிறுத்து யெடுத்துகுன்றிமணியிலைச் சாற்றால் மைபோலரைத்து மல்துணியில் தடவித்திரியாக்கி உலர்த்தி கொளுத்தி அதில்வரும் புகையை நாசியில்பிடிக்க மண்டைநோய் தீரும்.

கபாலவாயுவிற்குத்தைலம்.

குப்பைமேனிச்சாறு படி - கஅ, நல்லெண்ணெய் படி-உ, இவைரெண்டுஞ்சேர்த்து அடுப்பேற்றியெரித்துவடித்துஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

கபாலவாய்வுக்குப் புகை.

நெருக்கன்வேர் விராகனிடை-உஒ, அரிதாரம்-உஒ, இவை ரெண்டையுஞ்சேர்த்து யெலுமிச்சம்பழச்சார்விட்டு மைபோலரைத்து மல்துணியில் தடவித் திரியாக்கி உலர்த்தி கொளித்தி அதில்வரும் புகையை நாசியில்பிடிக்க கபாலவாய்வுகபாலவலி மண்டையிடி ஒற்றைத்தலைவலி இவைகள்தீரும்.

சுவாசகாசம் க்ஷயம் இருமல் இவைகளுக்கு வைத்தியம்.

காசம்-96-க்கும் சூரணம்.

திப்பிலி	பலம்	ரு	மிளகு	பலம்	உஒ
சுக்கு	,,	உஒ	சோம்பு	,,	ஒ
குரோசானிஓமம்	,,	ஒ	சீரகம்	,,	ஒ
தும்மராஷ்டகம்	,,	ஒ	சன்னராஷ்டகம்	,,	ஒ
தாளிசப்பத்திரி	,,	ஒ	லவங்கப்பத்திரி	,,	ஒ
லவங்கப்பட்டை	,,	ஒ	கடுக்காய்	,,	ஒ
தானிக்காய்	,,	ஒ	நெல்லிமுள்ளி	,,	ஒ
லவங்கம்	,,	ஒ	ஏலம்	,,	ஒ
சித்திரமூலம்	,,	ஒ			

இவைகளை நிறுத்தியெடுத்து இளம்வறுப்பாய் வறுத்துச்சூரணித்து வஸ்திரத்தில் வடித்து அத்துடன் சீனிசேர்-உ, சேர்த்து தேன்விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு தினம் காலைமாலை யிருவேளையும் கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவர காசம்முதலிய கூசு-ம் கபரோகங்களும் தீரும், இச்சாபத்தியம்.

சுவாசகாசத்திற்குப் புகை.

ஒருவிராகனிடை பொட்டிலுப்பை க-படி ஜலத்தில்கரைத்து அதில் ஒருதளமான கடுதாசியைத்தோய்த்துகொஞ்சம் நேரம்ஊரவைத்துப் பின்பு காற்றில் உலர்த்தி ஒருசுங்கானில் வைத்துக்கொளுத்தி அதில்வரும் புகையை உட்கொண்டால் உடனே குணமாகும்.

காசம்-5-க்கும் எண்ணெ.

யானையின் நகத்தைக் கொண்டுவந்து கத்தியால்சீவிஒரு விராகனிடை எடுத்து ஒருசேர் வேப்பெண்ணெயைக் காய்ச்சி அதில் சீவினநகத்தைபபோட்டுக் கரிகிப்போகாமல் பதத்தில் யிரக்கி வடித்துவைத்துக்கொண்டு ஒருவிராகனிடைவீதம் சாப்பிட்டுவர காசந்தீரும், இச்சாபத்தியம்.

இதுவுமது.

குன்றிமணியிடை தங்கரேக்கை கொண்டுவந்து போஜனஞ்செய்யும்போது முதல் அன்னத்தின் மேல்போட்டு நெய்யைக்காய்ச்சி அதின்மேல்விட்டு பிசைந்து சாப்பிட்டு விட்டு பிறகு பத்தியமாக வழக்கப்படிச் சாப்பிட்டுவர காசந்தீரும்.

ரத்தகாசந்தீரப் பால்.

முக்கால் விராகனிடை படிகாரத்தை - அ-அவுன்சுபசும் பாலில்போட்டுக் காய்ச்சி ஆறினபின் அரை அவுன்சு வீதம் தினம் ௩-தடவை கொடுக்க ரத்தகாசம் குணமாகும்.

இருமலுக்கு மிளகுசூரணம்.

ஒரு குமட்டிக்காயைக் கொண்டுவந்து அதற்கு ஒருசிரு துவாரஞ்செய்து அதில் மிளகைச்செலுத்தி நிழலிலுலர்த்தி யெடுத்தமிளகில் ஒருதடவைக்கு எ-மிளகை சூரணித்துஅத்துடன் தேன், திப்பிலித்தூள், இவைகளைச் சேர்த்துச் சாப்பிட்டுவர குணமாகும் இருமல்நிற்கும்.

இதுவுமது.

குன்றுமணியில் கருப்பு சிவப்பு வெள்ளையென-௩-விதங்களுண்டு, அதிலொன்றைக்கொண்டுவந்து அந்த யிலையை உலர்த்தி சூரணித்து அத்துடன் சர்க்கரைசேர்த்து தினம் திரிகடிவீதம் சாப்பிட்டுவர இருமல்தீரும்.

கிரகணிரோகம்-11-க்கும்வைத்தியம்
கிரகணி 11-ந்தீர மாத்திரை.

மாதுளம்பிஞ்சி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கருவாப்பிசின், காந்தம், கல்மதம், லிங்கம், இந்த-எ-தினுசும் வகைக்குப்பலம் க, நிருத்தெடுத்து சுத்திசெய்து சேர்த்துக் கல்வத்தில் போட்டு அத்திப்பால்விட்டு உ-ஜாமம்அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தினம்-உ-ங-தடவை ஒருமாத்திரைவீதம் வெல்லத்தில் கொடுத்துவர குணமாகும்.

வாய்வுகிரகணி ஊஷ்ணபேதிக்கு சூரணம்.

நூறுவருஷஞ்சென்ற வேப்பமரத்தின் பட்டை வெட்டி உலர்த்தி விராகனிடை-உறு, மிளகுவிராகனிடை-௰உ, இவை ரெண்டுஞ்சேர்த்துச் சூரணித்து அத்துடன் சர்க்கரை விராகனிடை (பதினெட்டேமுக்கால்) சேர்த்துவைத்துக்கொண்டு உ-விராகனிடைவீதம் எ-நாள் சாப்பிடக் குணமாகும்.

வாதபித்த சிலேஷ்ம கிரகணிகளுக்கு அடை.

ஒருபலம் சீரகத்தை ஒருபலம் கொட்டாங் கரந்தையுடன் சேர்த்து மைபோலரைத்துச் சிருவடைகளாகத் தட்டி நல்லெண்ணெயில் வருத்து தினம் ஒருவடை சாப்பிடகுணமாகும், இச்சாபத்தியம்.

வயறு கடுப்புத்தீர சூரணம்.

சீரகம்விராகநிடை-க, வெங்காயம் விராகநிடை-உ, கற்கடகசிங்கி விராகநிடை-ச, இவைகளை இளம்வருப்பாய் வருத்து சூரணித்து வைத்துக்கொண்டு திருகடிகை வீதம் பெருமைத்தயிரில் கொடுக்க தீரும்.

வயர்கடுப்பில் வேறுமுறை.

எ - பலம் சீரகத்தை இளம்வருப்பாய் வருத்து சூரணித்து ஒருபலம் சீனிகற்கண்டுப் பொடியை சேர்த்துவைத்துக்

கொண்டு தினம்-௩-விராகனிடை வீதம் பசும்நெய்யில் சாப்பிட்டுவர குணமாகும்.

வயர்கடுப்பிற்கு வேறுமுறை.

ஒருபலம் ஒருதலை வெள்ளைப்பூண்டைக் கொண்டுவந்து அதற்கு கரி உப்பை அரைத்து கவசஞ்செய்து உமிக்காந்தலில் வெதுப்பி பருப்பை யெடுத்து அரைத்துத்தயிரில்கொடுக்க குணமாகும்.

வயர்கடுப்புக்கு வேறுமுரை.

வெங்காயம் விராகனிடை - க, சீரகம் விராகனிடை - ௨, கற்கடகசிங்கி விராகனிடை - ௨, இவைகளை இளம்வருப்பாய் வருத்து சூரணித்து யெருமைத்தயிரில் கொடுக்கத்தீரும்.

மூலக்கடுப்பிற்குச் சூரணம்.

வெந்தியம் நெல்லிவற்றல் சுண்டக்காய்வற்றல் மாம்பருப்பு கருவேப்பிலை ஓமம் மாதுளம்பழத்தோல் வகைக்குவிராகனிடை ஒண்ணுயெடுத்து இளம்வருப்பாய் வருத்துச் சூரணித்து வைத்துக்கொண்டு தினம்-௩-விராகனிடைவீதம் தயிரில் கொடுக்கக் குணமாகும்.

சகலகழிச்சலுக்கும் கஷாயம்.

புளியாரை, வாழைப்பூ வகைக்கு ௪-அவுன்சு யெடுத்து பிட்டவித்துப் பிழிந்தசாற்றில் தேன்-ம - துளிவிட்டுக்கொடுக்க சகல கழிச்சலும் நிற்கும்.

அதிசாரரோகங்களுக்குவைத்தியம்.

அதிசாரம் 6-க்கும் சூரணம்.

ஓமத்தின் அரிசியும், காட்டாத்திப்பூவும், வகைக்குவிராகனிடை-ம, எடுத்து சூரணித்து திரிகடிகை பிரமாணம் இஞ்சிச்சாற்றில் கொடுத்துவர குணமாகும்.

சுரமில்லாத அதிசாரத்திற்கு சூரணம்.

காசிக்கட்டிவிராகனிடை காலும், கருவாப்பட்டைவிராகனிடைகாலும், எடுத்து சூரணித்து தேனில் கலந்து கொடுக்க உடனேதீரும்.

அதிசார சீதபேதிக்கு மாத்திரை.

ஜாதிக்காய்	விராக	க	ஜாதிப்பத்திரி	விராக	க
மாசிக்காய்	,,	க	கடுக்காப்பூ	,,	க
சீரகம்	,,	க	அதிவிடையம்	,,	க
லவங்கப்பூ	,,	க	அபினி	,,	க
வெந்தயம்	,,	க	கசகசா	,,	க
கோரோஜனம்	,,	க			

இந்த பதினொறுதினுசையும் கல்வத்தில்போட்டு முலைப்பால்விட்டு அரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலினுலர்த்தி வைத்துக்கொண்டு பெரியவர்களுக்கு உ-மாத்திரையும் குழந்தைகளுக்கு ௨-முதல் க-மாத்திரையும் தேனிலுரைத்துக் கொடுக்கக் குணமாகும், இச்சாபத்தியம்.

அஜீரணபேதிக்குகஷாயம்.

உ - விராகனிடை ஓமம் ஒருபிடி பெரண்டையும் சேர்த்தரைத்து ௨-படி ஜலத்தில்போட்டு ஹ-படியாய் வற்றக்காய்ச்சிக் கொடுக்கக் குணமாகும் பேதிநிற்கும்.

சீதபேதிரோகங்களுக்கு வைத்தியம்.

சுக்கு	பலம்	க
கிராம்பு	விராகனிடை	க
கண்டந்திப்பிலி	,,	க

இவை மூன்றையுங் கல்வத்தில்போட்டு எருமைத் தயிர் விட்டு மைபோலரைத்து சுத்தமான சிறுதுணிகளில் கொஞ்சம் கொஞ்சமாகவைத்து முடித்து ஒருசட்டியில் ௨-படி எருமைமோர்விட்டு அதில் மேற்படி முடிச்சிகளெல்லாம்போட்டு

அடுப்பேற்றி எரிக்க அவைகள்வெந்து மேலேமெதக்கும் அப்போதுயெடுத்து அத்துடன் ௩-விராகனிடை தேனும் ௫-விராகனிடைநெய்யுஞ் சேர்த்துவைத்துக்கொண்டு பாக்களவுகொடுத்துவர சீதபேதிநிற்கும்.

சீதபேதிக்கு மாத்திரை.

உ௫-விராகனிடை ஜாதிக்காயைச் சீலைமண்செய்து - உ-யெருவில் புடம்போட்டு யெடுத்து நெய்யும்தேனுஞ்சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து பாசிப்பயர் பிரமாணம் மாத்திரைகள்செய்து உலர்த்திவைத்துக்கொண்டு வேளைக்கு க-மாத்திரைவீதம் முலைப்பாலி லிழைத்து காலை மாலை யிருவேளையுங் கொடுத்துவர சீதபேதிதீரும், தீபனம் ரத்தவிர்த்தி யுண்டாகும், இச்சாபத்தியம்

குழந்தைகளுக்கு வேறுமுறை.

மாம்பருப்பும் கருவேப்பிலையும் சமமாகச் சேர்த்தரைத்துப் பிழிந்த ரசத்தில் க - விராகனிடை கொடுக்க வேண்டும் ஆனல் ௪-மணிக்கு ஒருவிசை கொடுக்கவேண்டும் அப்படிகொடுத்துவரக் குணமாகும்.

பெரியவர்களுக்கு வேறுமுறை.

கடுக்காப்பூ	விராகனிடை	௪
வெங்காயம்	,,	௪
சீரகம்	,,	க

இவைகளை வெதுப்பி அரைத்து எருமைத்தயிரில் கரைத்துக்கொடுக்கக் குணமாகும்.

குழந்தைகளுக்கு வேறுமுறை.

மாசிக்காய் தேரினதாய் க-கொண்டுவெந்துநொறுக்கிநெய்யில் வறுத்து சூரணித்து உ௫-குண்டுமணியிடை தேனில்கொடுக்கக் குணமாகும்.

பல்-நாக்கு-வாய் ரோகங்களுக்கு வைத்தியம்

உண்ணாக்கு வளர்த்தியால் காணும் இருமல் தீர பத்து.

நவாக்ஷாரத்தை தூள்செய்து உண்ணாக்கின்பேரில்தடவ உண்ணாக்கு வளர்ந்துகாணும் இருமல் உ-ங-வேளையில்தீரும்.

இதுவுமது.

நவாக்ஷாரமும் கல்சுண்ணாம்பும் சமமாகச் சேர்த்து பெலுமிச்சம்பழச் சார்விட்டரைத்து உண்ணாக்கில்தடவ குணமாகும்.

ரிணவாடைபிடிக்கு கொப்பளிக்கும் கியாழம்.

கருவேலம்பட்டையைக் கொண்டுவந்து சிதைத்து ஜலத்தில்போட்டுக் காய்ச்சினகஷாயத்தில் வாயைக்கொப்பளித்து வரக் குணமாகும்.

தொண்டை கரகரப்பிற்கு சூரணம்.

ஒருவிராகனிடை மஞ்சளை தூள்செய்து கால்படி பசும்பாலில்போட்டுக் காய்ச்சி சாப்பிடக் கரகரப்புத் தீரும்.

இதுவுமது.

முக்காவேளைவேர் விராகனிடை-வ, முசுமுசுக்கைவேர் விராகனிடை-க, இவைகளைப் பொடித்துக் கால்படி பசும்பாலில்போட்டுக் காய்ச்சிக் கொடுக்கக் கரகரப்புத்தீரும்.

சுண்ணாம்பைத்தின்ன வாய்ரிணத்திற்குக் கியாழம்.

மஞ்சளை யரைத்து ரணத்தின்மேல்தடவி ஒரு நிமிஷம் வைத்திருந்து பிறகு வாயை ஜலம்வார்த்துக் கொப்பளிக்க இவ்விதமாய் தினம்-ங-௬-தடவைசெய்ய ரிணம் ஆறும்.

நெஞ்சு ரணத்திற்குக் கியாழம்.

படிகாரம் ஒன்றேமுக்கால் விராகனிடை, மாசிக்காய் கஷாயம் ம௨-அவுன்சு, தேன் ஒன்றேமுக்கால்விராகனிடை இவைகளைச் சேர்த்துக் கலந்து வாய் கொப்பளிக்க நெஞ்சுப் புண் ஆறும்.

தொண்டை கம்மலுக்கு.

கடலைப்பிரமாணம் காசிக்கட்டியை வாயிலடைக்கிவைத்துக்கொண்டு ரசத்தை விழுங்க கம்மல் தீரும்.

தொண்டைநோயிற்கு கியாழம்.

க௨-விராகனிடை மௌளகாய்தூளும் ௬-அவுன்சு ரோஜாப்பூக் கஷாயமும் இவைகளைச் சேர்த்து வாயைக் கொப்பளிக்க குணமாகும்.

வாய்ரணத்திற்கு கஷாயம்.

படிகாரம் விராகனிடை-௨, ஜலம் சேர்-க, தேன்விராகனிடை-௨, இவைகளைச்சேர்த்து வாயைக் கொப்பளித்துவிழிய வாய்ரணம் அதிசீக்கிரத்தில் ஆரும் அல்லது கருவேலன் பட்டை கஷாயத்தையும் கொப்பளிக்க வாய்ரணம் ஆரும்.

தந்தவாயுக்குப்பொடி.

ஒரு சிறுகலயத்தில் கரியுப்பு - ௬-அவுன்சு செங்கொட்டை அ-அவுன்சுநரிக்கி குடுவையில்போட்டு அதின்மேல் ஒரு விரற்கடைஉயரம் எருக்கன்பால்விட்டு ஓட்டால்மூடி சீலைமண்செய்து ஒருபலம் யிடையில் கூம-எருவால் புடம்போட்டு யெடுத்துச் சூரணித்து வைத்துக்கொண்டு பல்துலக்கிக்கொண்டுவந்தால் தந்தவாய்வைக் கண்டிக்கும் பற்கள் கருக்காது இதுமெத்த நல்லமருந்து.

ஷை வாய்விற்கு வேறுமுறை.

எருக்கன்பழுப்பு சேர்-உ, பழங்கொட்டைப்பருப்பு செங்கொட்டைப்பருப்பு செங்கொட்டை கொட்டைப் பாக்கு வகைக்கு-எய, கரிவுப்பு படி-வ, இலுப்பையில [illegible]-மஉ, களிப்பாக்குபலம்-உ௰, இவைகளைத்தனித்தனியே கரிக்கிரமாக வறுத்து அத்துடன்காசிக்கட்டிதூருசு வகைக்குப்பலம்-கவ, சேர்த்துச் சூரணித்துப் பல்விளக்க குணமாகும்.

பல்பூச்சிகள்விழ மேல்பூசுமெண்ணெய்.

உமிங்காந்தலில்-ருய-கண்டங்கத்திரிப்பழத்தைக் கரிகிப் போகாமல் சுட்டு கல்வத்திலிட்டு பாகல் இலைச்சாறுவிட்டு மை போல் அரைத்து அரைச்சேர்நல்லெண்ணெயில் கரைத்து-அ- நாள் சூரியபுடம்வைத்து யெடுத்துவைத்துக்கொண்டுபல்லில் பூசிவர பல்லிலுள்ள புழுக்கள் வெளியாகும் நோய்தீரும்.

உதடுமேகப்புண் ஊறுக்கு எண்ணெய்.

மயிர்மாணிக்கம்வேர் வெந்தயம் வெங்காயம் வகைக்கு அவுன்சு-அ, சேர்த்து பசும்பால்விட்டுமைபோலரைத்து சய- அவுன்சு சிற்றுமணக்கெண்ணெயில்கரைத்து அடுப்பேற்றியெரித்து வடித்து வைத்துக்கொண்டு தினம்காலையில் அரை அவுன்சு கொடுத்துவர குணமாகும், இச்சாபத்தியம்.

பச்சைதாவரவர்க்க கூரக்கர வைத்தியங்கள் குப்பைமேனி உபயோகம்.

குப்பைமேனியிலையைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்துவைத்துக்கொண்டு அதில் அரைவிராகனெடை சர்க்கரைச் சேர்த்து வீசம் ஆழாக்கு ஜலத்தில்கலக்கிக்கொடுக்க வயிற்றிலுள்ளகிரிமிகள் வெளியாகும் இதின்வேரைசூரணித்துக்கொடுக்க மலங்கன்றாகக்கழியும் இதின் யிலையைப் பச்சையாகக் கொண்டுவந்து ஒருபாலடை ரசம்பிழிந்து அத்துடன் அரைபாலடை வேப்பெண்ணெய்சேர்த்துவைத்துக்கொண்டு குழந்

தையின் நாக்கில் தடவ குமட்டலும் உண்டாகி கபத்தைவெ ளியாக்கும்.

சிவதைவேர் உபயோகம்.

சிவதைவேரின் பட்டையைக் கொண்டுவந்து அரைத்து அதில் பாக்களவுயெடுத்து பசும்பாலில் கரைத்துக்கொடுக்க பேதியாகும் இத்துடன் திராக்ஷி உப்பு பலம்விராகனிடைசேர்த்துக்கொடுப்பது மிக நன்று.

சீமை அகத்தியிலையின் உபயோகம்.

சீமை அகத்தியிலையைக் கொண்டுவந்து சார்பிழிந்து அத்துடன் தேங்காய்ப்பால் சமமாகச்சேர்த்து சொரி சிரங்குகளுக்குமேல்பூச சொரியோடு நமச்சல்தீரும் ஆனல் விடாமல் ௨-௩-தினத்திற்குப் பூசிக் குளித்துவரவேண்டும்.

சீக்காய்க்கொழுந்தின் உபயோகம்.

சீக்காய்க் கொழுந்தைக் கொண்டுவந்து அதற்கு திட்டமாக காய்ந்தமிளகாயும், புளியும், உப்பும், திட்டமாகவைத்துத் துவையல்செய்து காலை மாலை யிருவேளையும் ௨ம - நாள் சாப்பிட பித்தத்தை சாந்தியாக்கும் போஜனத்தோடும் உபயோகிக்கலாம் காயை துவையல்செய்துசாப்பிட பேதியாகும்.

சுருள்பட்டையின் உபயோகம்.

சுருள்பட்டை பலம்-௨, கொண்டுவந்து அரைத்து அத்துடன் தேங்காய் நெய் பலம்-௪, சேர்த்துக் காய்ச்சிவடித்து வைத்துக்கொண்டு ரணங்களுக்குத் தடவிவரஉடனேஉலரும் ஆனல் ஆறும்வரைக்கும் தடவவும்.

கீழாநெல்லி உபயோகம்.

கீழாநெல்லி யிலையைக் கொண்டுவந்து சாறுபிழிந்து ௨-பலம்யெடுத்து பசும்பாலில் சேர்த்துக் காலைமாலை இருவேளை

யுஞ்சாப்பிட மஞ்சள் காமாலை தீரும் சாப்பிட்டுவரும் மூன்று நாளும் கடும்பத்தியமாக யிருக்கவேண்டும் இதின் யிலையை உலர்த்தி தூள்செய்து திருகடிகைப் பிரமாணம் பசும்பாலில் கலந்துக்கொடுக்க பசிதீவினையுண்டாகும் இதின் துளிரும் வெந்தயமும் சமனிடையாகச்சேர்த்து கால்படி ஜலத்திலேபோட்டு அரிக்கால்படியாய் வற்றக் காய்ச்சிக்கொடுக்கவயிறு கொட்டல் தீரும், இச்சாபத்தியம்,

தகரைவேரின் உபயோகம்.

உ-பலம் தகரைவேரைக் கொண்டுவந்து எலுமிச்சம்பழச்சார்விட்டு அரைத்து படர்தாமரைக்கு மேல்பூசிவர தீரும், இதின் விரையை அரைத்து மோரில்கலக்கி சொரிசிரங்குகளுக்குப் பூசிவர குணமாகும்.

திருநீற்றுப்பச்சையின் உபயோகம்.

திருநீற்றுப் பச்சிலையைக் கொண்டுவந்து ஜலம் விட்டு அரைத்துக் கொட்டைப்பாக்களவுகொடுக்க மேகம் இருமல் வயறுகொட்டல் இவைகள்தீரும், இச்சாபத்தியம். இதின் சாறு காதில்விட காதுவலி தீருல்.

ஆகாயத்தாமரையின் உபயோகம்.

ஆகாயத்தாமரை ஒருபிடியெடுத்து அரைபடி ஜலத்தில் போட்டு கால்படியாய்வற்றக்காய்ச்சி ௩-நாள் கொடுக்க நீர்சுருக்குத்தீரும் இலையை அரைத்து மூலத்துக்குத்தடவ மூலம் தீரும்.

ஆடுதிண்ணாப்பாளையிலையின்உபயோகம்.

ஆடுதிண்ணாப்பாளையிலையைக் கொண்டுவந்து சார்பிழிந்து அதற்குச் சமனிடையாக நல்லெண்ணெய்சேர்த்து வைத்துக் கொண்டு கருங்குஷ்டம் கரப்பான் சிரங்கு சிலந்தி இவைகள் மேல் பூசிவர தீரும்.

எள்ளின் உபயோகம்.

எள்ளையாவது யெள்ளு யிலையையாவது அரைத்து கால் முள்ளுதைத்த யிடங்களில் வைத்துக்கட்ட முள்ளை வெளிப் படுத்தும் எள்ளெண்ணையை அப்பட்டமாகக்கொண்டுவந்து வைத்துக்கொண்டு தினம் உச்சிக்கரண்டி வீதம் சாப்பிட்டுவர யிருமல் சொரிசிரங்கு தீரும் தேகம் பூரிக்கும்.

கஞ்சாங்கோரை யிலையின் உபயோகம்.

கஞ்சாங்கோரையிலையைக் கொண்டுவந்து கசக்கிச் சார் பிழிந்து குழந்தைகளுக்கு ௧-பாலடை கொடுக்க சுரம் மாந் தம் பேதி இருமல் இவைகள் தீரும்

கருநொச்சி யிலையின் உபயோகம்.

ஒருபிடி கருநொச்சியிலையைக் கொண்டுவந்து அரைபடி ஜலத்தில் போட்டு கால்படியாய் வற்றக்காய்ச்சிக் கொடுக்க சுரம்தீரும், இலையும் உப்பும் சேர்த்து வருத்து மூட்டுவலிகளு க்கு ஒத்தடம் கொடுக்கத்தீரும், இலைச்சாறும் எண்ணெயுஞ் சேர்த்து வீக்கங்களுக்குத் தடவிவர குணமாகும்.

கர்ப்பூரவள்ளியிலையின் உபயோகம்.

கர்ப்பூரவள்ளி யிலையைக் கொண்டுவந்து அரைபாலடை ரசம்பிழிந்து அதில் ௨-௩-உரை கோரோஜன மாத்திரையை உரைத்துக்கொடுக்க குழந்தைகளின்ஜலுப்பு, இருமல், இவை கள் தீரும்.

காக்கட்டான் வித்தின் உபயோகம்.

காக்கட்டான் விதையைக் கொண்டுவந்து நெய்யால்வரு த்துப் பொடித்து ஒருவிராகனிடைவீதங் கொடுக்க பேதியா கும் இதின் வேரை சூரணித்து அரை விராகநிடை குழந்தை களுக்குக் கொடுக்க வோக்காளம், வாந்திகாணும், கபத்தை

வெளியாக்கும் ஆனால் இதில்வெள்ளை நீலம் என இரண்டுவித ங்களுண்டு அதில்வெள்ளை சிரேஷ்டமென்று அறியவும்.

நிலவிளாம் நரிவிளாம் குட்டிவிளாம் இலையின் உபயோகம்.

இதில் யேதேனு மொன்றில் அரைபிடி யிலையைக் கொண்டுவந்து கால்படி ஜலத்தில்போட்டு அரிக்கால்படியாய் வற்றக் காய்ச்சிக்கொடுக்க சுரம், பித்தம், அதிசாரம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

சிருநெரிஞ்சி சமூலத்தின் உபயோகம்.

உ-பலம் சிருநெரிஞ்சி சமூலங்கொண்டுவந்து உ-படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சிவடித்து சர்க்கரை சேர்த்து காலையில் மூன்றுநாள் கொடுத்துவர நீர்யெரிவு சீழ் மேகம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

ஆனைநெரிஞ்சியின் உபயோகம்.

ஆனைநெரிஞ்சிச் சமூலங்கொண்டுவந்து அரைத்து கொட்டைப்பாக்களவு பெருமைத்தயிரில் கலக்கி ௩-நாள் காலையில்கொடுத்துவர மயக்கம், தாகம், வெள்ளை, வெண்குஷ்டம் தேகயெரிவு இவைகள் தீரும்.

பிரண்டைசமூலத்தின் உபயோகம்.

பிரண்டையைக் கொண்டுவந்து சனுவைப்போக்கி - உ பலம்யெடுத்து அரைத்து தினம்பாக்களவு எட்டு நாளைக்குக் கொடுத்துவர ஆசன தினவு ரத்தமூலம்தீரும்.

பூவரசன்பட்டை உபயோகம்.

பூவரசன்பட்டையைக்கொண்டுவந்து ஜலம்விட்டு அரைத்து பாக்களவு நீராகாரத்தில் கலக்கிக் கொடுக்க பேதியாகி

சொரிசிரங்கு தீரும். இதின் காயின்ரசத்தை யெச்சத்தழும்பின்மேல் ஊரல் அடங்கும்படி தேய்த்துவர குணமாகும்.

பொடுதலை சமூலத்தின் உபயோகம்.

ஒருபலம் பொடுதலையிலையைக்கொண்டுவந்து ஆழாக்கு ஜலத்தில்போட்டு அரை ஆழாக்காய் வற்றக்காய்ச்சிகுழந்தைகளுக்கு ஒருபாலாடைவீதங்கொடுக்க மாந்தம், சுரம், இவைகள்தீரும்.

வல்லாரை சமூலத்தின் உபயோகம்.

வல்லாரை யிலையைக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி சூரணித்து வைத்துக்கொண்டு வ - விராகனிடைவீதம் ஜலத்தில் கலக்கி காலை மாலையும் கொடுத்துவர திரேக சௌக்கியமுண்டாகும் இதின் தூளை ரணத்தின்மேல் தூவினால் ரணம் ஆரும்.

விஷ்ணுகிராந்தியின் உபயோகம்.

விஷ்ணு கிராந்தியிலை ஒருபலம் கொண்டுவந்து அரைப்படிஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி ௩ - நாள் காலையில் கொடுத்துவர சுரம், இருமல், இவைகள் தீரும்.

வெட்டிவேர்ன் உபயோகம்.

அரைபலம் வெட்டிவேர் கொண்டுவந்து கால்படி ஜலத்தில்போட்டு அரிக்கால்படியாய் வற்றக்காய்ச்சிக் கொடுத்துவர தாகசுரம், வாதரோகம் இவைகள்தீரும்.

வெண்டையிலையின் உபயோகம்.

வெண்டையிலையைக்கொண்டுவந்து ஜலம்விட்டுஅரைத்து போஷ்டுசெய்து கட்டிகளுக்குக் கட்டலாம் இதின்விதையைக்கஞ்சி காய்ச்சிக் கொடுக்க இருமல் நீர்பெரிவு மலக்கட்டு இவைகள் தீரும்.

அம்மான்பச்சரிசி சமூலத்தின் உபயோகம்.

அம்மான்பச்சரிசியில் வெள்ளைசிகப்புயென இரண்டுவித முண்டு இதில் வெள்ளையைக்கொண்டுவந்து ஜலம்விட் டரைத்துப் பாக்களவு காலையில் ௩-நாள் சாப்பிட்டுவர தேகத்தடிப்பு எரிப்பு புண் பிரமேகம் மலக்கட்டு இவைகள்தீரும், சிகப்பை இவ்விதமாகச் சாப்பிட்டுவர சுக்கிலத்தை விர்த்தியாக்கும் பிரமேகத்தை நீக்கும் இச்சாபத்தியம்.

கற்ருழைசோரின் உபயோகம்.

கற்ருழைமடலைக் கொண்டுவந்து அதின் உள்ளிருக்குஞ் சோற்றையெடுத்துக் கழுவி-உ-பலம்எடுத்து அத்துடன் கால் விராகனிடை படிகாரத்தூளைச்சேர்த்து துணியில் மூட்டை கட்டி கண்ணோவுக்கு ஒத்தடங்கொடுக்க கண்ணோவு தீரும் வீக்கங்களுக்குக் கட்ட கரையும்.

விலாரியிலையின் உபயோகம்.

விலாரியிலையைக் கொண்டுவந்து ஆமணக் கெண்ணையில் வதைக்கி வீக்கம்கட்டி இவைகளின் மேல்போட்டுக் கட்டத் தீரும்.

அத்திப்பட்டையின் உபயோகம்.

ங-பலம் அத்திப்பட்டையைக்கொண்டுவந்து க-படி ஜலத்தில்போட்டு அரைபடியாக வற்றக்காய்ச்சி ௩-நாள் ஆறுவேளைசாப்பிட சீதபேதி-புண்-பெரும்பாடு-ரத்தமூத்திரம் இவைகள் தீரும், இதின் விதையில் காலாழாக்குப் போட்டு பாயாசஞ்செய்து அதில் சீனிகலந்து சாப்பிட மலம் நன்ருய் யிரங்கும், அத்திப்பிஞ்சை சமையல்செய்து சாப்பிட ரத்தமூலம்-வாயு-கிரகணி குணமாகும், அத்திப்பாலை உ - பலம் எடுத்து வெண்ணையில்கலந்து சாப்பிட்டுவர ரத்தபேதி-நீரிழிவுஇவைகள் தீரும், அத்திக்கள்ளை தினம் காலையில் காலாழாக்குச் சாப்பிட்டுவர மேகம்-காரிகம்-பித்தமயக்கம் இவைகள்தீரும்.

புங்கன்வேரின் உபயோகம்.

புங்கன்வேர் பச்சையாகக்கொண்டுவந்து கத்தியால் அதின்பட்டையைச்சீவி பிழிய சார்வரும் அதையெடுத்து புரையுள்ளரணத்தில் செலுத்தி தடவிவர ரணம் உலர்ந்து ஆரும், இதின்நெய்யை கரப்பான்-கிரந்தி-செவிநோய் இவைகளுக்குத் தடவ குணமாகும் காதில்விடவேண்டும்.

நெல்லிவேரின் உபயோகம்.

ஒருபலம் நெல்லிவேரைக் கொண்டுவந்து - ௨-படி ஜலத்தில்போட்டு வ-படியாகக்காய்ச்சி காலையில்சாப்பிட்டுவர பித்தம்-தாகம்-வாந்தி இவைகள்தீரும் மலம் நன்றாய்க்கழியும்.

நெல்லிக்காயின் உபயோகம்.

இரண்டுபடி நெல்லிக்காயைக்கொண்டுவந்துஉரலில்போட்டு துவைத்து கொட்டையை நீக்கி அதற்குப் போதுமான மிளகாயும் உப்புஞ்சேர்த்துப்பிசைந்து எலுமிச்சங்காய்ப்பிரமாணம் உருண்டைசெய்து அடைத்தட்டி வெய்யலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது ஒரு அடையை துவையல்செய்து சாதத்தோடு உபயோகிக்க கபரோகம்-மலக்கட்டு-வாந்தி இவைகள்தீரும், காலையில் கொட்டைப்பாக்களவு சாப்பிட நன்று.

நெல்லிவிதையின் உபயோகம்.

நெல்லிவிதையைக்கொண்டுவந்து நெருக்கிஅதிலுள்ளிருக்கும் பருப்பையெடுத்து கால்பலம்வீதம் சாப்பிட்டுவர சூடு வோக்காளம் இவைகள்தீரும்.

அருநெல்லிக்காயின் உபயோகம்.

பிரதிதினம் காலையில்-ரு-அரிநெல்லிக்காய் வீதம் - ௨௰-நாள் சாப்பிட்டுவர சுரம்-அரோசிகம் இவைகள் தீரும், பித்தத்தை சாந்தப்படுத்தும்.

பனங்கிழங்கின் உபயோகம்.

உ-அல்லது ரு-பனங்கிழங்கைக் கொண்டுவந்து சுட்டாவது வேவித்தாவது தினம் ரு - கிழங்கு சாப்பிட்டுவர மேகம் உ௰-ம், கரப்பான்-ரணம்-ரத்தசீதபேதி இவைகள்தீரும்.

பனனுங்கின் உபயோகம்.

பனனுங்கு நாள் ஒன்றிற்கு ச-ரு-வீதம்-௰-நாள் சாப்பிட்டுவர சீதபேதிஇவைகள்தீரும், ஆனால் தோலோடு சாப்பிடவேண்டும்.

பனங்கள்ளின் உபயோகம்.

தினம்பனங்கள்ளை காலையில்கால்படிவீதம்-ச௰-நாள் சாப்பிட்டுவர சுக்கிலம்விர்த்திக்கும், எ-தாதுக்களும் வலுக்கும்.

மாதுளம்பிஞ்சியின் உபயோகம்.

ஒருமாதுளம்பிஞ்சைக் கொண்டுவந்து மேல்தோல்நீக்கி அதின்உள்ளிருக்கும் விதையை சாப்பிட்டுவர அதிசாரம்-கூ-ம்-தீரும், ஆனல்-௰-நாளைக்குச் சாப்பிடவேண்டும்மேற்சொன்னப்பிரகாரம் பழத்தைச் சாப்பிட பித்தம்-தாகம்-கபம்-வாந்தி இவைகள்தீரும்.

இலந்தப்பழம் உபயோகம்.

உ௰ - நாளைக்கு நாள் ஒன்றுக்கு ரு-யிலந்தம்பழம்வீதம் காலைமாலையில் சாப்பிட்டுவர வாந்தி-பித்தம்-மூர்ச்சைதீரும்.

கள்ளியின் உபயோகம்.

கள்ளி-திருகுகள்ளி-சதுரக்கள்ளி- கொடிக்கள்ளி-இலைக்கள்ளியென ரு-விதங்களுண்டு, இதில்ஏதேனும் ஒருபாலைவெல்லத்தில் பணவிடை வைத்துக்கொடுக்க பேதியாகும்.

வேப்பனிலையின் உபயோகம்.

ஒருபிடி வேப்பனிலையை உ-படி ஜலத்தில்போட்டு கால் படியாய் வற்றக்காய்ச்சி - ங-வேளைகொடுக்க - சுரம் - சுசு-ந் தீரும், அம்மை கண்டபேர்க்கு அரைத்து மேல்பூச குணமாகும், கட்டிக்குத்தடவ கட்டிஉடையும் ரணத்துக்குத் தடவ ரணம் உலரும்.

வேப்பங்கள்ளின் உபயோகம்.

வேப்பங்கள்ளை வீசம்படிவீதம் உய-நாள் காலையில்சாப்பிட்டுவர பசிதீபனமுண்டாகும், இதின்கொட்டையை உடைத்து மேல்தோல்நீக்கி அரைத்துப் பாக்களவு - ங-நாள் சாப்பிட ஜன்னிரோய்தீரும், இதின் எண்ணெயைத்தடவ ரணம் ஆறும், இதின்பூவை சமைத்துச்சாப்பிட பித்தசாந்தியாகும்.

வேப்பம்பட்டையின் உபயோகம்.

ங-பலம் வேப்பம்பட்டையைக் கொண்டுவந்து உ - படி ஜலத்தில்போட்டு வ-படியாய் வற்றக்காய்ச்சி இருவேளைசாப்பிட பசியுண்டாகும் சீதசுரம் தீரும், சுரம்விட்டு யிருக்கும் போது பட்டையை சூரணித்து அதில் பணவிடைவீதம் ஜலத்தில்கலக்கி ங-நாள்கொடுக்க பின்பு சுரம்வராது.

பூவரசன் கொட்டையின் உபயோகம்.

ரு-பூவரசன் கொட்டையைஎடுத்து மேல்தோல் போக்கி பசும்பால்விட்டரைத்து அந்தபாலில் கலக்கிச்சாப்பிட பேதியாகும் குன்மம்-வயிற்றுயிரைச்சல்-கிருமிகரப்பான் இவைகள் தீரும், ஆனால் பித்தம் அதிகரிக்கும்.

அழிஞ்சில்வேர்ப்பட்டையின் உபயோகம்.

அழிஞ்சில் வேர்ப்பட்டை பச்சையாகக் கொண்டுவந்து அம்மியில்வைத்து ஜலம்விட்டு மைபோல்அரைத்து அதில்பாக்களவு காலையில்கொடுக்க பித்தசாந்தியாகும் மயக்கந்தீரும்.

ஆலம்பாலின் உபயோகம்.

ஆலம்பாலைக் கரந்துவந்து கால் வெடிப்புகளுக்கும் பல் நோய்களுக்கும் மேல்தடவிவர கால்வெடிப்புஆரும்பல்நோய் தீரும், நாவரகூஷிக்கு உச்சிக்கரண்டி வீதம் உள்ளுக்குச் சாப் பிட குணமாகும்.

ஆலம்பட்டையின் உபயோகம்.

ஆலம்பட்டை பலம்-உ, கொண்டுவந்து-ஏ-படி ஜலத்தில் போட்டு வ-படியாக வற்றக்காய்ச்சி தினம்காலையில்அரிக்கால் படிவீதம்-ங-நாள் சாப்பிட்டுவர நீரிழிவு தீரும்.

சுரயிலையின் உபயோகம்.

சுரயிலையை கொண்டுவந்து சார்பிழிந்து தினம்காலையில் ஏ-படிசார்வீதம் ங-நாள்சாப்பிட்டுவர திரேகவீக்கம்சோகை இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

பாகயிலையின் உபயோகம்.

பாகயிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து நாள்வொன் றுக்கு காலையில் ஒருரூபாயிடை-ங-நாள்சாப்பிட்டுவர விரோ சனக்காரி-திரிதோஷம்-கிரிமிரோகம் இவைகள்தீரும், இச்சா பத்தியம்.

கொடிகுரிஞ்சாயிலையின் உபயோகம்.

கொடிகுரிஞ்சா யிலையைக் கொண்டுவந்து உலர்த்தி சூர ணித்து வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு ஏ - விராகனி டை தூள் யெடுத்து சலத்தில் கரைத்துக்கொடுக்க வாந்தியா கும் அன்றியும் நாக்குப்புண் காசம் இவைகளுக்கும் உபயோ கிக்கலாம்.

கொடிகுரிஞ்சாவேரின் உபயோகம்.

கொடிகுரிஞ்சாவேரைக் கொண்டுவந்து உலர்த்திசூரணித்துக்கொண்டு திரிகடிகை பிரமாணம் யெடுத்துப் பெரியவர்களுக்கு ஜலத்தில்கரைத்துக்கொடுக்க வாந்தியாகிக்கபத்தை அருக்கும்.

கோவையிலையின் உபயோகம்.

கோவையிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து தினம் காலையில் உ-ஆழாக்குவீதம் ௲-நாள் சாப்பிட்டுவர நீர்க்கட்டு வாதம்-இருமல்-ஊஷ்ணம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

கோவைக்கிழங்கின் உபயோகம்.

கோவைக்கிழங்கைக்கொண்டுவந்து உலர்த்திசூரணித்து வைத்துக்கொண்டு தினம் திரிகடிகைப்பிரமாணம்-ம-நாள் காலையில் சாப்பிட்டுவர கோழை-குஷ்டம்-பித்தம்-மதுமூத்திரம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

கோவைக்காயின் உபயோகம்.

கோவைக்காயைக்கொண்டுவந்து வத்தலாகஉலர்த்திவைத்துக்கொண்டு சமைத்துச் சாப்பிட்டுவர - கபம்-சுரம்-ஊஷ்ணம் இவைகள் முதலானதும் தீரும்.

உத்தாமணியிலையின் உபயோகம்.

உத்தாமணியிலையைக்கொண்டுவந்து சார்பிழிந்துதினம் வ-ஆழாக்குவீதம் ௲-நாள் காலையில் சாப்பிட்டுவர தீபனகாரியுண்டாகும், வயற்றெரிச்சல் வாதம்-அம-ம், சுவாசகாசம்-ரு, சன்னி-மரு, தேகவலிதீரும், இச்சாபத்தியம். இந்தயிலை ரசத்துடன் சுண்ணும்பைக்கலந்து வீக்கங்களுக்குமேல் பூசிவர வீக்கம்வாடி நோய்தீரும்.

சித்திரமூலவேரின் உபயோகம்.

சித்திரமூலத்தில் நீலம், சிவப்பு, வெள்ளை, ௩ - விதங்களுண்டு. அதில்ஏதாவது ஒன்றைக்கொண்டுவந்து ஜலம்விட்டு அரைத்துப்போடக் கொப்பளிக்கும், அரையாப்புக்கட்டியின் பேரில்போட கட்டி உடையும், இருமலுக்கு மார்பின்பேரில் போட யிருமல் தீரும்.

வெள்ளிரிக்காயின் உபயோகம்.

வெள்ளிரிக்காயைக்கொண்டுவந்து மேல்தோல்சீவி துண்டு துண்டுகளாக அருத்து வைத்துக்கொண்டு மிளகும் உப்பும் சமமாகச்சேர்த்து பொடித்துவைத்துக்கொண்டு ஷை துண்டுகளை தூளில்தொட்டு நாள் ஒன்றுக்கு ஒருகாய்வீதம்பனிரெண்டுமணிக்குச் சாப்பிட்டுவர நீர் எரிவு நீர்க்கட்டு இவைகள் தீரும், ௫-௬-நாள் சாப்பிடவும்.

வெள்ளிரிவிதையின் உபயோகம்.

வெள்ளிரிவிதையை யெடுத்து மேல்தோல் நீக்கி உள்ளிருக்கும்பருப்பை ௨-ஆழாக்குவீதம் ௨௰-நாள் சாப்பிட்டுவர நீரடைப்பு - கல்அடைப்பு - சதைஅடைப்பு-பிரமேகம்-௨௧-ந் தீரும், பத்தியமில்லை.

தாமரைக்கிழங்கின் உபயோகம்.

தாமரைக்கிழங்கைக் கொண்டுவந்துஉலர்த்தி சூரணித்து சமனிடை சீனிக்கலந்து திருகடிகைப் பிரமாணம்௰ - நாள் காலையில் சாப்பிட்டுவர கண்களைப் பிரகாசிக்கச் செய்யும், விதையைச்சாப்பிட சுக்கிலத்தை விர்த்திக்கும், தாமரைப்பூவைச்சாப்பிட தேகசூடு-நீர்யெரிவு-சுரம்இவைகள்தீரும், பத்தியமில்லை.

பேப்புடலின் வேரின் உபயோகம்.

பேய்ப்புடலின்வேர்கொண்டுவந்து ரசம்பிழிந்து வீசம் ஆழாக்குவீதம்-௩-நாள் காலையில்கொடுத்துவர மலங்கழியும்

திரேகசவுக்கியமுண்டாகும், இதுபோல் இலேரசங் கொடுக்க வாந்தியாகும் சுரம்இருமல் இவைகள்தீரும், இச்சாபத்தியம்.

மிளகரணைவேரின் உபயோகம்.

மிளகரணைவேராகிலும்,பட்டையாகிலும், யிலையாகிலும், இம்மூன்றில் ஒன்றைக்கொண்டுவந்து அதில் பலம்-௨, யெடுத்து ௨ - படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து மூன்றுபோதுகொடுக்க கபம்-அஜீரணம்-வாயுஇவைகள் முதலானதும் தீரும், இச்சாபத்தியம்.

மராட்டிமொக்கின் உபயோகம்.

மராட்டிமொக்கில் ஒன்றுயெடுத்து கால்படிபசும்பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க வயற்றுவேதனை தீரும் பேதி கட்டும், ஆனல் இதுமயக்கமுள்ளதாதலால் ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும்.

மூக்குரட்டைவேரின் உபயோகம்.

மூக்குரட்டைவேர் பலம்-௩, கொண்டுவந்து-௨-படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி இருவேளையுங் கொடுக்க மலம் ஒன்றாகக்கழியும் கிரிமிகள் வெளியாகும் வயற்றுவலி தீரும்.

திராக்ஷிப்பழத்தின் உபயோகம்.

பச்சை திராக்ஷிபழத்தை ௰-நாள் சாப்பிட்டுவர மயக்கம் பித்தம் இவைகள்தீரும், உலர்ந்ததைச்சாப்பிட்டுவர தாகம் சுரம் தீரும் சுக்கிலத்தை விர்த்திக்கும்.

காட்டாமணக்கு யிலையின் உபயோகம்.

காட்டாமணக்கு யிலையைக்கொண்டுவந்து ரசம்பிழிந்து (அரிக்கால்) ஆழாக்குவீதம் தினம்காலையில் ௩-நாள் கொடுத்துவர வெள்ளை விழுதல் - குன்மம் எட்டு-மேகப்புண்-ஊஷ்ணம்-உள்மூலம் இவைகள்தீரும், இச்சாபத்தியம்.

துத்தியிலையின் உபயோகம்.

துத்தியிலையைக்கொண்டுவந்து ரசம்பிழிந்து அரிக்கால் ஆழாக்குவீதம் ௩-நாள் காலையில் கொடுக்க மூலம்தீரும் வயற்றிலுள்ள கிரிமிகள்விழும் பத்தியமில்லை.

துத்திவிதையின் உபயோகம்.

துத்திவிதையை 1 - விராகனிடை யெடுத்து அத்துடன் சீனிகலந்து நாளொன்றுக்கு இம்மாதிரியாக ௨௰-நாள்சாப்பிட்டுவர கருமேகம்-குஷ்டந்தீரும், இச்சாபத்தியம்.

துத்திப்பூவின் உபயோகம்.

துத்திப்பூ ௨-பலம் எடுத்து அரைபடி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சிக்கொடுத்துவர காசம்தீரும்.

விழுதியிலையின் உபயோகம்.

விழுதியிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து அரிக்காலாழாக்குவீதம் காலையில்சாப்பிடப் பேதியாகும்.

விழுதிவேரின் உபயோகம்.

விழுதிவேர் பலம்-௨, எடுத்து அரைப்படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து ஸ்திரீகளுக்குக் கொடுக்க வயற்றிலுள்ளகிருமிகள்செத்து வெளிப்பட்டு கெர்ப்பந் தரிக்கும்.

தும்பையிலையின் உபயோகம்.

தும்பையிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து அரிக்கால்படிவீதம் காலையில் ௩-நாள் கொடுத்துவர மந்தம்- வாதம்-சிலாரோகம் இவைகள்தீரும், இச்சாபத்தியம்.

தும்பைப்பூவின் உபயோகம்.

தும்பைப்பூவை பலம்-உ-யெடுத்து ஒருபலம் சுத்தமான எள்ளெண்ணெயில்போட்டு சுய-நாள் ஊரினபின் யெடுத்துக் கண்ணில் கலிக்கமிட ஜன்னி-ய௲-நேத்திரரோகம் தீரும்.

கண்டங்கத்திரியிலையின் உபயோகம்.

கண்டங்கத்திரியிலையைக் கொண்டுவந்து ரசம் பிழிந்து ௩-நாளைக்கு காலையில் ஹு-படிவீதம்கொடுத்தாலுஞ்சரி அல்லது ஒருபிடியிலையை உ-படிஜலத்தில்போட்டுக் கால்படியாய் வற்றக் காய்ச்சிக்கொடுக்க நீர்யேற்றம்-யீளை-சுவாசம் - ஜலபீனிசம் இவைகள்தீரும், பத்தியமில்லை.

கண்டங்கத்திரிக்காயின் உபயோகம்.

கண்டங்கத்திரிக்காயைச் சமைத்துச்சாப்பிட சிலேஷ்ம ரோகம் உய-ம் குணமாகும், ஆனால் ஊஷ்ணஞ்செய்யும்.

பசுமுன்னையிலையின் உபயோகம்.

பசுமுன்னையைக்கொண்டுவந்து பெருமைப்பாலில் அவித்து சமைத்துச்சாப்பிட மந்தாக்கினி வாதம்இவைகள்தீரும்.

நாவல்பட்டையின் உபயோகம்.

நாவல்பட்டையைக்கொண்டுவந்து பசும்பால்விட்டு அவித்துஇடித்து ரசம்பிழிந்து அரிக்கால்படிவீதம் ௩-நாள்காலையில்சாப்பிட்டுவர வாய்ரோகம் கபரோகம் தீரும், இதுபோல் வேரை யிடித்துக் கொடுக்க சீதபேதி சுரம் அதிமூத்திரம் இவைகள் தீரும்.

மாவிலிங்கப்பட்டையின் உபயோகம்.

மாவிலிங்கப்பட்டை பச்சையாகக்கொண்டுவந்து இடித்துரசம்பிழிந்து ஆழாக்குவீதம் ௩-நாள் காலையில் கொடுத்து

வர வாதம் அ௰-ம், ஜன்னி ௰௩-ம், திரேக அஸ்தி திரும், இச்சாபத்தியம்.

பாதரிவேரின் உபயோகம்.

ஒருபலம் பாதரிவேரைக்கொண்டுவந்து ௨-படி நல்லெண்ணெயில்போட்டு தயிலபதமாகக்காய்ச்சி வாரத்திற்கு இரண்டுமுறை ஸ்நானஞ்செய்துவர கை-கால்-கண்கள் இவைகளின் எரிவு மதுமூத்திரம்-மேகசுரம்-இவைகள்தீரும், ஸ்நானஞ்செய்யும்நாள் பகலில் நித்திரை நீக்கவேண்டும்.

சண்பகவேரின் உபயோகம்.

அரிக்காபலம் சண்பகவேரை ௨-௨ - பலம் நல்லெண்ணெயில்போட்டுக் காய்ச்சி ஸ்நானஞ்செய்துவர சுரம் தீரும், பசியுண்டாகும், பூவை உபயோகிக்க கண்ணெறிவுதீரும் சுக்கிலத்தை விர்த்திக்கும்.

இலுப்பைவேரின் உபயோகம்.

இலுப்பைவேர் பலம்-௨, எடுத்து ௩-படி-நல்லெண்ணெயில்போட்டுக் காய்ச்சி ஸ்நானஞ்செய்துவர சுரம் சுச - அதிமூத்திரம் குணமாகும்.

சாரைப்பருப்பின் உபயோகம்.

கால்படி சாரைப்பருப்பு யெடுத்து ஜலம்விட்டு மைபோலரைத்துவைத்துக்கொண்டு ச-பலம் - பூராசக்கரையைப் பாகுசெய்து அதில்அரைத்த பருப்பைப்போட்டுக் கிண்டி-௨௨-பலம்நெய்விட்டு லேக்கியபதமாகக்கிளரி இரைக்கிதேன்பலம் அரைவிட்டு பிசரிக்கலந்து வைத்துக்கொண்டு பாக்களவு காலைமாலைச் சாப்பிட்டுவர நீர்யெரிவு பிரமேகம் தீரும், சுக்கிலத்தை தடிப்பிக்கும், இச்சாபத்தியம்.

முசுமுசுக்கையிலையின் உபயோகம்.

முசுமுசுக்கை யிலையைக்கொண்டுவந்தரசம்பிழிந்து அரிக்காலபடி.வீதம்-௩-நாள் காலையில்சாப்பிட்டுவர கோழைசுவாசம் காசம் இவைகள்தீரும், இச்சாபத்தியம்.

கோவைக்கிழங்கின் உபயோகம்.

கோவைக்கிழங்கு சாதாரணமாகக் கடையில் அகப்படும் அதில் ஒரு விரல்பெருமனுயும் நரைபோல் வெளுத்த நிரமா யும் உள்ளகிழங்குகள் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்து வஸ்திரத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு திருகடிகைப்பிர மாணம் சர்க்கரையில் கலந்து சாப்பிட்டுவர மூலவியாதிகள் தீரும், இச்சாபத்தியம்.

தேள்கொடுக்கிலையின் உபயோகம்.

தேள்கொடுக்கிலையைக் கொண்டுவந்து ஜலத்தில் அல ம்பி சலம்போக வேர்சீலையில் ஒத்திஎடுத்து உள்ளங்கையில் வைத்துக் கசக்கி ரசம்பிழியாமல் தூல்லியமாக மெல்லியசீலை யில்வைத்து மூட்டைகட்டி கண்ணோயிற்கு ௩-நாள் மணிக் கொருவிசை ரசத்தைக் கண்ணில் பிழிந்துவர கண்ணோய் தீரும் கண் எரியாது ஆனல்யிலையை அப்போதைக்கப்போது கசக்கி உபயோகிக்கவேண்டும்.

நன்னாரிவேரின் உபயோகம்.

நன்னாரிவேர் புதிதாகக்கொண்டுவந்து உலர்த்தி சூரணி த்து வஸ்திரத்தில்வடிகட்டி வைத்துக்கொண்டு திருகடிகைப் பிரமாணப் நாள் ஒன்றுக்கு இருவேளையும் ௨௰-நாள் சாப்பி ட்டுவர தீரும்வியாதிகள், ஸ்ரீகளால் உண்டாகும் சூடு உழலை சகலதோஷம்-சுரம்-தாகம்-புண்-மதுமேகம்- இவைகள் குண மாகும். இதை-க-பலம் கற்றாழைச்சோற்றில்கலந்துக்கொடுக் கவும், அல்லது தேனில் வெதுப்பி அரைத்துப் பாக்களவு-௩ நாள் சாப்பிட வண்டுகடிவிஷந்தீரும், இச்சாபத்தியம்.

நன்னாரிவேரின் வேறுவித உபயோகம்.

நன்னாரிவேர் பரித்தவுடன்-ச-அவுன்சு யெடுத்து அதை சதைத்து ஒருமண்பாத்திரத்தில் ஒருபுட்டி ஜலம்விட்டு நன் றாய்க் கொதிக்கவைத்து அதில் ஷெ வேரைப்போட்டு மூடி

வைத்து உ-மணிநேரம் பொறுத்து யெடுத்து வடிகட்டி இரு த்துவைத்துக்கொண்டு பிராயமானவர்களுக்கு ஒரு நேரத்தி ற்கு ரு-அவுன்சுவீதம் நாள் ஒன்றுக்கு ரு - நேரங் கொடுக்க வும், குழந்தைகளுக்கு ஒருநேரத்திற்கு கஉ - அவுன்சு வீதம் கொடுக்கலாம், பிராயமுள்ளவர்களுக்கு யேது காரணத்தினு லாவது வரும்பலயீனமாரிபலனை யுண்டாக்கும், குழந்தைகளு க்குக் கொடுக்க தேக ஒளிதீரும், அன்றியும் மேகவியாதிகள் பருக்கள் தோல் வியாதிகள் அஜீரணம் பசியின்மைநெடுநாள் சென்ற வாதம் இவைகளுக்கு யெல்லாம் உபயோகிக்கலாம், இச்சாபத்தியம்.

நாகமல்லிவேரின் உபயோகம்.

புதிதான நாகமல்லிவேர் கொண்டுவந்து அதில் பலம்-உ யெடுத்து சதைத்து ம-பெரிதான எலும்மிச்சம்பழம் கொண்டு வந்து ரசம்பிழிந்து அதில் ஷை சதைந்தவேரைப் போட்டுக் கலந்துவைத்துக்கொண்டு படர்தாமரைக்கும் தோலைப் பற்றி வந்தசொரிசிரங்குகளுக்கும் மேல்பூசிவர குணமாகும்-ம-நாள் பூசவும்.

நீராகாரத்தின் உபயோகம்.

காலையில் மலசலங்கழிந்தவுடனே தந்தசுத்தி செய்துக் கொண்டு ஒருவேளை நீராகாரத்தில் போதுமான உப்பு சேர் த்து கலக்கிச் சாப்பிட்டுவர தாகம் முத்தோஷம்வாயுஇவை கள்தீரும் தாதுபுஷ்டியுண்டாம்.

அருசுவையின் உபயோகம்.

பதார்த்தங்கள் சமைத்துச்சாப்பிடுவதில் துவர்ப்பு,புளி ப்பு, மிஞ்சுமாகில் வாதமுண்டாகும். உவர்ப்பு, கசப்பு,மிஞ்சு மாகில் பித்தமுண்டாகும். கார்ப்பு, இனிப்பு, மிஞ்சுமாகில் சிலேஷ்மமுண்டாகும். யாவும் சமமாக சமைத்துச்சாப்பிடில் பலனுண்டாகும் வியாதியில்லையாம்.

அன்னபின்னத்தின் உபயோகம்.

அன்னம் பொசிப்பதற்கு-அ-பங்கு பலனும்,அவல்பொசிப்பதில் அ-பங்கு பலனும்,முப்பழம்பால் பொசிப்பதில் - அ பங்கு பலனும்,ஊண் ஊணிர்க்கு-அ-பங்கு பலனும்.

ஆகாபசும்பாலின் உபயோகம்.

பசுக்கள் அலைந்தும் திரிந்தும் சுடுகாட்டாடுயெலும்பைத்தின்றும் நோய்கொண்டதும் மலம் அரிந்தினதும் வெண்புள்ளியுடையதும் இவ்வகையான பசுக்களின்பால் சாப்பிடுவதில் கபனேயும் திரிதோஷமும் வயதுகுரைவுமுண்டாகும்.

ஆட்டின் கொழுப்பின் உபயோகம்.

ஆட்டின்கொழுப்பு பலம்-உ-ல், ஜாதிக்காய் வால்மிளகு சங்கம்பழம் இவைகள் வகைக்குக் கால்பலம்சேர்த்து அரைத்துவைத்துக்கொண்டு பாக்களவு சாப்பிட்டுவர ரத்தகாசம், இரத்தரோகம், இமைக்காசம், க்ஷயரோகம், கோழைநோய், இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

ஆட்டுப்பாலின் உபயோகம்.

வெள்ளாட்டுப்பால் கரந்து நாள் ஒன்றுக்கு இருவேளையும் வேளையொன்றுக்கு அரிக்கால்படி விதம் உய-நாள் சாப்பிட்டுவர க்ஷயரோகங்கள் மூர்க்கமான யிருமல் பித்தகாசம் மந்தம் இவைகளுக்குக் கொடுக்கப்படும், அன்றியும் சரீரபலயீனர்களுக்கும் வயறு கழிச்ச லுள்ளவர்களுக்கும் பசியின்மைக்கும் சந்தேகமின்றிக் கொடுக்கப்படும், இவை சஞ்சீவியென நம்பவேண்டும்.

சித்தாமணக்கெண்ணெயின் உபயோகம்.

காலாழாக்குசித்தாமணக்கு எண்ணெயும் ஒரு எலுமிச்சம்பழச்சாறும் கால்பலம் சீனாகற்கண்டும் சேர்த்து நன்றாக மிசிரித்து காலையில்சாப்பிடப்பெதியாகும் நீர்க்கட்டுமலக்கட்டு

இவைகளை வெளியாக்கும், திரேகத்திற்குச் சவுக்கியமுண்டாம், சிறுகுழந்தைகளுக்கு முலைப்பாலும்பெண்ணெயும்ஒரு பாலடைவார்த்துவர மிகநன்றும், தோலுக்கடுத்த நோய்களுக்கு மேல்பூசிவர குணமுண்டாம்.

இரவிலுண்ணும் பதார்த்தங்களின் உபயோகம்.

அத்திக்காய் அவரைப்பிஞ்சு ஆவின்பால் கண்டங்கத்திரிக்காய் துவரை தூதுளம் முருங்கைக்காய் இவைகள் சாப்பிட நன்றாய் போஜனம் செய்தானபிறகு சயனிக்கும்போது ஆழாக்குப் பசும்பால் சாப்பிட்டுவர க்ஷயரோகம் நேத்திரரோகம்தீரும் தாதுபுஷ்டியும் திரேகத்தில் ரத்தப் பரவலும் உண்டாகும்.

இராப்பசுவின்பால் உபயோகம்.

இரவில்கரக்கும் பசும்பாலை போஜனஞ் செய்தானபிறகு படுக்கைக்குப் போகும்போது கால்படி அல்லது அரைபடி வீதம் பிரதிதினமும் சாப்பிட்டுவர அழல்-ஈளை-கபம் - கண்களில்உண்டாகும் பிணிகள் இவைகள் தீரும், தாதுகட்டும், திரேகம்மேனிகொடுக்கும், பாலைக்காய்ச்சி உபயோகிக்கவும்.

இரும்புகண்டியின் வென்னீர் உபயோகம்.

நாள்தோறும் இரும்புப்பாத்திரத்தில் ஜலம்விட்டுக்காய்ச்சி போஜனஞ் செய்யுங்காலமும் மற்றக்காலமும் சாப்பிட்டுவர பாண்டுநோய்போகும், இந்திரியபுஷ்டி யுண்டாக்கும், நரம்புகள் உறப்பாகும், திரேகம் குளிர்ச்சியோடு மெத்தச்சுகம் உண்டாகும்.

இலந்தன்வேரின் உபயோகம்.

க-பலம் யிலந்தன்வேரைகொண்டுவந்துசமைத்து அரைப்படி-ஜலத்தில்போட்டுக்காய்ச்சிக் கால்படியாக வற்றினபின் வடித்து மூன்றுநாள் காலையில் கொடுத்துவர ஆபாசந் தீரும்

ஊமத்தின்யிலையின் உபயோகம்.

ஊமத்தின்யிலையில் வெள்ளூமத்தன் கருவூமத்தன்யென இரண்டுவிதமுண்டு அதில் கருவூமத்தன் யிலையைக் கொண்டு வந்துஉலர்த்திப் புகையிலை சுருட்டைப்போல்செய்து புகைக் குடிக்கில் சுவாசகாசம்உடனேதீரும், நாள்பட்டயிருமல்போகும், இந்தயிலையைப் பச்சையாகஅரைத்து போஸ்டுசெய்து வாதவீக்கம் வாதக்கட்டிகள் தோல்மேல் யிருக்கும் வீக்கங்கள் இவைகளுக்குக்கட்டகுணமாகும். மேகவியாதிகட்டிக்கு இந்தயிலையை சாராயத்தில்ஊரவைத்து நோய் இருக்குமிடத்தில் கட்ட குணமாகும், நரம்புசிலந்திகளுக்கும் கட்டலாம் இந்தயிலையைக் காயவைத்துப் பொடிசெய்துப் பன்றிக்கொழுப்பில்கலந்து வைத்துக்கொண்டு முகத்திலுண்டாகும் வலிபோன்ற அனேகவிதநரம்புவலிகளுக்கு மேல்தடவிவர குணமாகும், ஆனால் இது நஞ்சுள்ளவஸ்துவானபடியால் இதை அனுபோகமும் ஆலோசனையுங்கொண்டு உபயோகப்படுத்துவது மகாஉத்தமமாம்.

எருக்கன்பாலின் உபயோகம்.

ஜன்னிகட்டி புரங்கழுத்திசுவு கீல்வாய்வு இவைகளுக்கு எருக்கன்பாலைக்கரந்து நோயுள்ளவிடங்களில் தளும்பப் பூசி அதின்மேல் கரிமஞ்சளை தூள்செய்து போடவும் இந்தப்படி மூன்றுநாள்செய்துவர குணமாகும்.

எருமைசாணத்தின் உபயோகம்.

எருமைசாணம்போடும்போது அதில்கொஞ்சம் எடுத்துவந்து ஒருசீலையில்வைத்துப்பிழிய ரசம்வரும் அந்தரசத்தில் ஒருகரண்டிவீதம் காலையில் ௩-நாள் சாப்பிட்டுவர குணமாகும், இரத்தவாந்தி காமாலை புண் பெரும்பாடு வயருப்பிசப் இவைகளுக்கு உபயோகிக்கவும், ஆனால் அனலுண்டாம் உப்பில்லாதபத்தியம்.

எருமைத்தயிரின் உபயோகம்.

எருமைத்தயிர்சாப்பிட்டுவரில் கண்ணொளிவுதரும் பித்தசாந்தியாகும் மெரிச்சல் இவைகள்தீரும், ஆனால் மந்தமும் வாதமு முண்டாகும்.

எருமைநெய்யின் உபயோகம்.

எருமைநெய்யை போஜனத்தோடு உபயோகப்படுத்திவரில் கண்ஒளிவுதரும், ஆனல் புத்திகெடும் மெய்யின் அழகு போகும் கரப்பான் பித்தம் வாதம் இவைகளுண்டாம்.

எருமைப்பாலின் உபயோகம்.

எருமைப்பாலைச் சாப்பிட்டுவரில் புத்திதெளிவு போம் திமிருண்டாகும் மருந்துகளுக்கு முரிவென்றறியவும்.

எருமைமோரின் உபயோகம்.

எருமைமோர் சாப்பிட்டுவரில் காமாலை கிராணி ஜலக்கழிச்சல் தாகம் கெர்ப்பப்புழு இவைகளுக்குவுபயோகப்படுத்திவர மிகவும்நன்ரும்.

எருமைவெண்ணெயின் உபயோகம்.

எருமைவெண்ணெயை சாப்பிட்டுவரில் யெரிவு நீரிழிவு இவைகள்தீரும், ஆனல் கபம் கரப்பான் கிரிமி மந்தவாதம் இவைகள் உண்டாகும்.

எருமைமூத்திரத்தின் உபயோகம்.

எருமை காலையில்விடும் மூத்திரத்தைப் பிடித்து அதில் வீசம்படிவீதம் காலையில் ௩-நாள்சாப்பிட்டுவர சோகை பாண்டு மேகம் வயற்றுநோய் இவைகள் தீரும் அனலுண்டாம் உப்பில்லாதபத்தியமாக யிருக்கவேண்டும்.

எலிக்காதிலையின் உபயோகம்.

எலிக்காதிலை பலம்-௧௦, எடுத்து அரைபடிஜலத்தில்போட்டு வ-படியாகவற்றக்காய்ச்சி ௩-நாள்காலையில்சாப்பிட்டுவர சுரம் தாகம் நீரிழிவு பிரமியம் கடுப்பு இவைகள் தீரும், தாது புஷ்டியுண்டாம், இச்சாபத்தியம்.

எலியாமணக்கன்பாலின் உபயோகம்.

எலியாமணக்கன் பால்கரந்து வீசம்படிவீதம் காலையில் சாப்பிட்டுவர யெலிவிஷம், குன்மம், பலவிஷங்கள், பீலிகம், விரைவீக்கம், இவைகள் குணமாகும். ஆனால் பேதியதிகமாகும் ஆள்பெலமரிந்துகொடுக்கவும் ௩ - நாள் கொடுக்கவேண்டும், இச்சாபத்தியம்.

வெள்ளெருக்கன்பட்டையின் உபயோகம்.

உ-பலம் வெள்ளெருக்கன் பட்டையைக் கொண்டுவந்து உலர்த்திப் பொடிசெய்து-ஙு-பலம் வேப்பெண்ணெயில் கலந்து வைத்துக்கொண்டு கீல்வாதம், சத்துவாதம், இவைகளுக்கு மேல் பூச்சாகப்பூசிவர குணமாகும்.

வெள்ளைக்கடுகின் உபயோகம்.

வெள்ளைக்கடுகை அரைத்து போஸ்டுசெய்து ஜன்னிக்கும் அகோர தலைநோயிற்கும் உள்ளங்காலிலும் கண்ட சதையிலும் வைத்துக்கட்டகுணமாகும். வாந்திபேதிக்கும்குன்மத்திற்கும்வாய்விற்கும் குடல்வலிகளுக்கும் சுரமில்லாமலிருந்தால் வயற்றின்பேரிலும் திமிர்வாதமாகில் முதுகின்பேரிலும் வைத்துக்கட்ட குணமாகும். இதனோடு முருங்கைப் பட்டையுஞ் சேர்த்து அரைத்துக்கட்ட மிகவும் அதிகாரமுண்டாம்.

புன்னக்கொட்டையின் உபயோகம்.

புன்னக்கொட்டையைக்கொண்டுவந்து மேல்தோல்நீக்கி அதினுள்ளிருக்கும் பருப்பையெடுத்து வென்னீர்விட்டு அரைத்து தனுர்வாதங்களுக்குமேல்பூசிவர குணமாகும். ஒருகொட்டையின்பருப்பைநசுக்கி வ-பலம் நல்லெண்ணெயில்போட்டுக்காய்ச்சி காதில்விடக் காதிலுள்ள புண்கள் ஆறும்.

நிலப்பனங்கிழங்கின் உபயோகம்.

நிலப்பனங்கிழங்கைகொண்டுவந்து உலர்த்திகுரணித்து சீலையில் வடிகட்டிச் சமனிடைசர்க்கரைச்சேர்த்துக்கொண்டு

திருகடிகைப் பிரமாணம் காலை மாலை ௰-நாள் சாப்பிட்டுவர விலாக்குத்தல் மேகம்தீரும், வீரியவிர்த்தியுண்டாம்நல்லெண் ணெயில்போட்டுக் காய்ச்சி ஸ்நானஞ்செய்துவர செவிநோய் தீரும், இச்சாபத்தியம்.

முசுர்க்காதிலையின் உபயோகம்.

முசுர்க்கா திலையைக் கொண்டுவந்து வதக்கி கை, கால், கீல், வீக்கங்களுக்குமேல்வைத்துக்கட்ட வீக்கம்வாடிக்குண மாகும்.

கோழியவரையிலையின் உபயோகம்.

கோழியவரை யிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து வீசம்படிவீதம் உள்ளுக்குக் கொடுக்க வயற்றுவலி ஆமைக் கட்டி இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

சிறுபூளைக்காலியிலையின் உபயோகம்.

ஒருபிடிசிறுபூளைக்காலி யிலையைக்கொண்டுவந்து ௨-படி ஜலத்தில்போட்டுக் காய்ச்சிவடித்து அரிக்கால்படிவீதம்கொ டுக்க க்ஷயம்-கோழை-மந்தம்-இவைகள்தீரும்.

செந்தாமரையிலையின் உபயோகம்.

ஒருபிடி செந்தாமரையிலையைக் கொண்டுவந்து ௨ - படி ஜலத்தில்போட்டு கால்படியாகக் காய்ச்சிவடித்து - ௩ - நாள் கொடுக்க பசியுண்டாகும், நீர்யெரிவு - மூளைமூலம் - வாதம்- இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

சீந்தில்கிழங்கின் உபயோகம்.

சீந்தில் கிழங்கைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்து சமனிடை சர்க்கரைக் கலந்துவைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும் திருகடிகைப்பிரமாணம் சாப்பிட்டுவர பசியு ண்டாகும் பித்தம்-சயி-சாந்தியாகும் கஷாயமிட்டு குழந்தை களுக்கு வார்க்க மாந்தசுர மிவைகள்தீரும், இச்சாபத்தியம்.

தண்ணீர்விட்டான்கிழங்கின் உபயோகம்.

தண்ணீர்விட்டான்கிழங்கைக் கொண்டுவந்து உலர்த்திச் சூரணித்து சமனிடைசர்க்கரைக் கலந்து சாப்பிட்டுவர சோபைசுரம் வெள்ளை அதிமூத்திரம் இவைகள்தீரும், வேளைபொன்றுக்கு திருகடிகைப் பிரமாணம் காலைமாலை சாப்பிடவேண்டியது.

நெய்தல்கிழங்கின் உபயோகம்.

நெய்தல்கிழங்கை கொண்டுவந்து சூரணித்து வைத்துக் கொண்டு உ-பலம் தூள் நிறுத்தெடுத்து ரு - பலம் சர்க்கரையைபாகுசெய்து அதில்தூளைப்போட்டு ஒருபலம் நெய்விட்டு லேகியபதமாககிண்டி இறக்கி வ-பலம்தேன்விட்டு மிசிரித்து வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும்கொட்டைப்பாக்களவுசாப்பிட்டுவர பித்தம்-சய-ரத்தகிரகணிசூடு இவைகள் தீரும், சுக்கிலத்தை விர்த்திக்கும், இச்சாபத்தியம், ஆனல் இது சீதளக்காரியென்றறியவும்.

செங்கழநீர்க் கிழங்கின் உபயோகம்.

செங்கழனீர்க்கிழங்கைக் கொண்டுவந்துஉலர்த்தி சூரணித்து வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும் திருகடிகைப்பிரமாணம் சாப்பிட்டுவர பித்தம்-சய, மேகம்-உய, புணர்ச்சியின் உஷ்ணம் இவைகள்தீரும், இச்சாபத்தியம்.

கோரைக்கிழங்கின் உபயோகம்.

கோரைக்கிழங்கை கொண்டுவந்து சூரணித்துசமனிடைச்சர்க்கரைக் கலந்து காலை மாலை இருவேளையும் திருகடிகைப் பிரமாணம் சாப்பிட்டுவர குளிர், சுரம், பித்தம், தாகம், கபம், மூர்ச்சை, பேதி, வாந்தி, இவைகள் தீரும், அதிகமூத்திரமிறங்கும்.

இஞ்சிக்கிழங்கின் உபயோகம்.

ஒருபலம் இஞ்சிக்கிழங்கை கொண்டுவந்து நசிக்கிச்சார் பிழிந்து பொங்கக்காய்ச்சி இறக்கி அதில்லொரு காசியிடைதேன்விட்டு இவ்விதமாக மூன்றுபோதுகொடுக்க சுரம், சன்னி, ஒக்காளம், வாதம், கபம், இவைகளுக்குக் கொடுக்கத்தீரும்.

கருஞ்செம்பைப்பூவின் உபயோகம்.

கால்பலம் கருஞ்செம்பைப்பூவை ௩-பலம் நல்லெண்ணெயில்போட்டு காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்துவரகபாலசூலை பீனிசம் நீர்க்கட்டு இவைகள் தீரும்.

வெங்காயவிதையின் உபயோகம்.

வெங்காய விதையும் பனங்கர்க்கண்டும் சமனிடையாக வேளையொன்றுக்கு ஒருபலம் வீதம் ௩ - நாள் சாப்பிட்டுவர மேகம், மூலம், தேகக்காங்கை, நீர்யெறிவு, இவைகள் குணமாகும்.

துளசிவிதையின் உபயோகம்.

க-பலம் துளசிவிதையும் உ-பலம் பனங்கற்கண்டும் சேர்த்து ஒருமண்பாத்திரத்திலாவது கோப்பையிலாவதுபோட்டு ஆழாக்குஜலம்விட்டு ஒருராமுழுதும் ஊரவைத்து மறுநாள் காலையில் யெடுக்கப் பாயாசம்போல் இருக்கும் அதைச் சாப்பிட சீதம்விழுதல் தீரும், ஆனால் இவ்விதமாக ௩-நாள் சாப்பிடவேணும் அன்றியும் யிலையைப் பிட்டுவைத்து ரசம் பிழிந்து பெரியவர்களுக்கு (அரிக்கால்) படியும் குழந்தைகளுக்கு ஒருபாலடையும் கொடுக்க ஜலுப்புத்தீரும்.

சங்கன்வேரின் உபயோகம்.

ஒருபலம் சங்கன்வேரைக்கொண்டுவந்து உ - படி ஜலத்தில்போட்டு வ-படியாய்வற்றக் காய்ச்சிவடித்து-௩-நாள் கொடுக்க கிரிமி, வாதம், காசம், கோழை, கபம், இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

பேராமுட்டிவேரின் உபயோகம்.

ஒருபலம் பேராமுட்டிவேரை சதைத்து ௨-படிஜலத்தில் போட்டு வ-படியாக வற்றக்காய்ச்சி வடித்து ௩-நாள் சாப்பிட்டுவர பித்தம், சுரம், தாகம், மாந்தம், இவைகள்தீரும், சிற்றுமுட்டிவேரை யிம்மாதிரியாக கஷாயமிட்டுக் கொடுக்க சுரம்-௯௪-ம் கேழ்க்கும், இச்சாபத்தியம்.

அவரிவேரின் உபயோகம்.

௨-பலம் அவரிவேரை ௨-படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி பாகித்து ௩-நாள்கொடுக்கவெள்ளைவிழுதல் வயிற்றுவலிமூர்ச்சை இவைகள்தீரும், இச்சாபத்தியம்.

முக்காவேளைவேரின் உபயோகம்.

ஒருபலம் முக்காவேளைவேரைக் கொண்டுவந்து ௨-படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து இருவேளையும் ௩-நாள்கொடுக்க அன்னத்துவேஷம் சுரம்,மந்தம், வாதம், இவைகள்தீரும்.

பெரியாநங்கையிலையின் உபயோகம்.

௨-படி பெரியாநங்கையிலையை கொண்டுவந்து-௨படி ஜலத்தில்போட்டு வ-படியாகவற்றக்காய்ச்சி ௩-நாள் ஆறுவேளை கொடுக்க மலக்கட்டு பித்தம் ௪௰-ம்-தீரும், இச்சாபத்தியம்.

மிளகுதக்காளியிலையின் உபயோகம்.

ஒருபிடி மிளகுதக்காளியிலையை ௨-படிஜலத்தில்போட்டு வ-படியாக வற்றக்காய்ச்சி வடித்து நித்திரையில் கை கால்களைச் சேர்த்து முரிக்கிக்கொள்ளும் வாதத்திற்கும் பாண்டு மேகம் உட்சூடு இவைகளுக்கும் உபயோகிக்க குணமாகும், இச்சாபத்தியம்.

பேரீச்சங்காய்பழத்தின் உபயோகம்.

நாள் ஒன்றுக்கு ௫-காய் வீதம் ௲ - நாள் சாப்பிட்டுவர மதுமூத்திரம் உமிநீர்வடிதல் இவைகள் குணமாகும், இம்மாதிரியாக பழத்தைச் சாப்பிட்டுவரநீர்க்கட்டு பித்தசுரம்இவைகள் குணமாகும்.

தேயிலையின் உபயோகம்.

தேயிலையில் கருப்புப் பச்சையென இரண்டு விதங்களுண்டு இதில் கருப்பைக் காப்பிசெய்து உபயோகிக்க நரம்புகளில் வியாபித்து தென்பைக்கொடுத்து ஆயாசத்தைநீக்கும் வியாதியாளருக்கு யிளப்பையாற்றும்.

பச்சை தேயிலையின் உபயோகம்.

பச்சைதேயிலையைக் காப்பிசெய்து கொடுக்க நித்திரையைப்போக்கடிக்கும் ரத்தஓட்டத்தைக்குறைத்துவிடும் சாராயங்குடித்தவர்களுக்கு காணும் மயக்கத்தைதணிக்கும் திரேகமலுப்பாகக் காண்கிற உறக்கத்தையும் நீக்கும் தேய்த்தண்ணீர் காரமாகச் செய்துகொடுத்தால் சிலவேளை தென்பையும் சிலவேளை சோம்பலையுந் தரும் ஆனல் அல்ப ஊஷ்ணஞ் செய்யும்.

காசிக்கட்டியின் உபயோகம்.

காசிக்கட்டியைக்கொண்டுவந்து ஜலத்திலாவதுசாறுயத்திலாவது உறைத்து மூலக்காம்பு வெடிப்புகளுக்கும் தொண்டைகம்மல்களுக்கும் பத்துப்போட குணமாகும், சீதபேதி வெள்ளைவிழுதல் அதிசாரம்இருமல் இவைகளுக்கும் பெரியவர்களுக்கு ௰ - குன்றுமணியிடையும் சிரியவர்களுக்கு ௫- குன்றுமணியிடையும் பொடித்துகொடுக்கக் குணமாகும்.

சூரத்துநிலாவரையின் உபயோகம்.

அரைபலம் சூரத்து நிலாவரையைக் கொண்டுவந்து காற்படி ஜலத்தில்போட்டு (அரிக்கால்) படியாய் வற்றக்காய்ச்சி

இருவேளைகொடுக்க மலச்சிக்கல் நீர்யேற்றம்குணமாகும் கும ட்டல்உண்டாகாமல் இருக்க காப்பிபோல்செய்து சாப்பிட வேண்டில் பசும்பால், சுக்குத்தூள், சீமையிந்துப்பு, திராக்ஷி, உப்பு, இவைகளில் ஏதாகிலும் ஒன்றைச்சேர்த்து கொடுக்க வும், கெற்பஸ்திரி மூலரோகி சிறுகுழந்தையிவர்களுக்குநிலா வரை கொடுக்கப்படாது.

நிலாவரை வேறுவித உபயோகம்.

உ-பலம் நிலாவரையும் வ-பலம் சுக்குத்தூளும் சேர்த்து கால்படிஜலத்தில்போட்டு அரிக்கால்படியாய் வற்றக்காய்ச்சி வடித்து அதில்ஆமணக்கெண்ணெய் உ-பலம்விட்டுக்காலையில் சாப்பிட சுகபேதியாகும் நிலாவரை சிறுகுடல்களில் வியாபி த்து பேதியை உண்டாக்கும்.

அதிமதுரவேரின் உபயோகம்.

ஒண்ணரை அவுன்சு அதிமதுரத்தை ஒருபயிண்டு ஜலத் தில்போட்டுக் காய்ச்சி வடித்துக்கொடுக்க நீர்சுருக்குமூத்திர ரோகம் இவைகள்தீரும், அதிமதுரத்தின் சிறியதுண்டைவா யில்அடக்கி சாரத்தை விழுங்கினால் இருமல்தணியும், கரகர ப்புத்தீரும், இதுபோல்பட்டையை உபயோகிக்க பேதி இரு மல்தீரும்.

சோம்புவிதையின் உபயோகம்.

சோம்புவிதையைக் கஷாயமிட்டு வடித்து குழந்தைகளு க்கு ௰-குண்டுமணியிடை வீதங்கொடுக்க அதிசாரம், வாயு வால்காணும்வலி இவைகள் குணமாகும், முலைப்பாலைச் சுரப் பிக்கும்குணமிதற்குண்டு.

சீரகத்தின் உபயோகம்.

வேளைக்கு ஒருவிராகனிடை சீரகமும் உ - விராகனிடை சீனாகற்கண்டும் சேர்த்து இவ்விதமாக ௬-நாள் சாப்பிட்டுவர பித்தம் சமமாகும் பசிதீவனமுண்டாகும்.

கொத்தமல்லிவிதையின் உபயோகம்.

ஒருபலம் கொத்தமல்லி விதையை வ-படி ஜலத்தில்போட்டுக்காய்ச்சிவடித்த கஷாயத்தில் கால்படிபசும்பாலும் - உ-பலம் சர்க்கரையும்சேர்த்து தினம் இம்மாதிரியாகக் காய்ச்சிக் காலையில்சாப்பிட்டுவர பித்தத்தை சமமாக்கும், ஆரோக்கியத்தைத்தரும், வாதத்தைஹரிக்கும், தாகத்தையடக்கும், வாந்தியைநிருத்தும்.

காப்பிக்கொட்டையின் உபயோகம்.

காப்பிக்கொட்டை பித்தத்தை விர்த்திக்கும் தேகத்திற்கு பலத்தையுண்டாக்கும் பசி தீவனங்கொடுக்கும் ஊஷ்ணத்தைச்செய்யும் இவ்வித குணங்களுண்டாம் காப்பிசெய்து பால்சர்க்கரை சேர்த்து கொஞ்சமாகச் சாப்பிட்டால் பேதியைக்கட்டும் அதிகமாகக்குடித்தால் பேதியாகும் காசம்சுவாசமிவ்வகளுக்குக்கொடுத்தால் உடனேசாந்தமாகும் குழந்தைகளுக்கு வாந்தியைநீக்கும், சுரம் முகஜன்னி கக்கிருமல் தலைவலி முதலியவைகளுக்குங் கொடுக்கப்படும்.

சடாமாஞ்சில்வேரின் உபயோகம்.

சடாமாஞ்சில்வேர் பலம்-உ, எடுத்துநொரிக்கி அரைபடி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சிவடித்துக்கொடுக்க சூதகசன்னி, காக்கைவலி, இரைப்பு, இருமல், சுவாசம், கிரிமி, அக்கினிமந்தம், குடைச்சல், சுரம், குஷ்டம் இவைகளுக்குக் கொடுக்க நன்று சூதகசன்னிக்கு அடிக்கடி உபயோகப்படுத்தவும்.

அக்கராகாரத்தின் உபயோகம்.

அக்கராகாரத்தை வாயில்போட்டால் ஜலம் ஊறும் - உ-பலம்அக்கராகாரத்தை நொரிக்கி-உ-படி ஜலத்தில்போட்டு-வ-படியாகவற்றக்காய்ச்சி வடித்து-ங-நாள் சு-போதுசாப்பிட்டுவர தந்தரோகம், சுரம், தாகம், வாதம் இவைகள்தீரும், ஒரு

துண்டை வாயில்போட்டுமென்றால் நீர்வடியும் பல்நோய்குண மாகும்.

ஜாதிக்காயின் உபயோகம்.

முத்தினஜாதிக்கா ஒன்றுகொண்டுவந்து பொடிசெய்து ௩-குன்றுமணியிடை தூள்யெடுத்து ௨-திராம்போர்ட்டொயினில் தூளைப்போட்டுக்கொடுக்க ஊஷ்ணவாய்வைக் கண்டிக்கும் இதை பேதிமருந்துகளோடு சேர்த்துக்கொடுக்க வயற்றுக்கடுப்பை நீக்கும் ஆனால் அசதிசன்னிக்கு இதைகொடுக்கப்படாது.

மிளகின் உபயோகம்.

௨-பலம் மிளகையெடுத்து நெய்விட்டு வருத்து கடையவிட்டு ௮-படி ஜலம்விட்டு அரிக்கால்படியாய் வற்றக்காய்ச்சி வடித்துச் சாப்பிட ஊஷ்ணித்து வாய்வை கண்டிக்கும் பசியுண்டாக்கும் கண்கள்மேல்வரும் கண் கட்டிகளுக்கு மிளகை யெடுத்து ஜலம்விட்டு உரைத்துத் தடவிவரஉடனே குணமாகும். பேதி, அதிசாரம், அஜீரணம் இவைகளுக்கு இந்தகஷாயங்கொடுக்க நன்மைதரும் வியாதியைக்கண்டிக்கும்.

வெள்ளைப்பூண்டின் உபயோகம்.

வெள்ளைப் பூண்டை அரைத்து மேல்தடவ நோய்கள் தீரும் உட்கொள்ள மூத்திரம் ஊஷ்ணமும்அதிகரிக்கும் கபத்தைவெளிப்படுத்தும் கிரிமிகளை நீக்கும் எண்ணெயில் போட்டுக்காய்ச்சி செவியில்விட காதுநோய்தீரும்.

புகையிலையின் உபயோகம்.

புகையிலையை ௨-பலம் எடுத்து ௮-படி ஜலத்தில்போட்டு அரிக்கால்படியாய் வற்றக்காய்ச்சி ௩-நாள் காலையில்கொடுக்க மலக்கட்டு நீர்க்கட்டு குடல்வாதம் இவைகள்குணமாகும் புகயிலையை சுருட்டுசெய்துப் பிடித்துவர மலம் நன்று யிரங்கும் அதின்தூள் நாசிக்கு உபயோகித்துவர பீனிசரோகம் குண

மாகும் இதைவாயிலடக்க உமிநீர்வடிந்து தந்தநோய்குணமாகும் இதற்கு இருதயத்தின் நடையைக் குறைக்கின்ற குணமிருப்பதால் அளவுக்குஅதிகமானல் மார்புநோய் உண்டாகும் குழந்தை பலயீனர் கிழவர் இவர்களுக்கு இதை கொடுக்கப்படாது.

சாலாம்பிசிரி வேரின் உபயோகம்.

சாலாம்பிசிரிவேர்பலம்-ខ, எடுத்துத்தூள்செய்து வ-படி பசும்பாலில்போட்டுக் காய்ச்சி வடித்து ஒருபலம் சர்க்கரைச் சேர்த்துச் சாப்பிட்டுவர திரேகத்திற்குப் பலமும் தாதுபுஷ்டியுமுண்டாகும் இதை க்ஷயரோகத்திற்கும் கொடுக்கலாம் உ௰-நாள் சாப்பிடவேண்டும்.

சுக்குஉலர்ந்த கிழங்கின் உபயோகம்.

தேரினசுக்கைக்கொண்டுவந்து சூரணித்து வஸ்திரத்தில் வடிக்கட்டி வைத்துக்கொண்டு காலை மாலை திரிகடிகைப் பிரமாணம் சாப்பிட்டுவர வாய்வைகண்டித்துப் பசியை உண்டாக்கும், அதிசாரம், இரைப்பு, செவிநோய், தலைநோய், வாதம், குன்மம், மந்தம், கபம், சூலை முதலியவைகளுக்கு இதைஅடிக்கடி உபயோகப்படுத்த குணமாகும்.

மஞ்சள் கிழங்கின் உபயோகம்.

மஞ்சள்கிழங்கைசூரணித்து சமனச் சர்க்கரை கலந்து கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவர வயறுபொருமல் தீரும் முழுகிழங்கை தீயில்கொளுத்தி தீயையமர்த்தி அதில் வரும் புகையை நாசியில்பிடிக்க சகலதோஷம்தீரும்தலைவலிவீக்கம் இவைகளுக்கு உரைத்து சுண்ணாம்பும் கொஞ்சம் சேர்த்து பத்துப்போட குணமாகும்.

கசகசாவிதையின் உபயோகம்.

கசகசாவை பால்விட்டு அரைத்து அரிக்கால்படி பால் பிழிந்து ரு - நாள் சாப்பிட்டுவர கிரகணி, திமிரு, அதிசாரம்,

இவைகள் தீரும், தாதுபுஷ்டியுண்டாகும், கசகசாவும் அத்தி யிலையும் சமமாகச்சேர்த்து காடிவிட்டு அரைத்து நமைச்சல் களுக்குப்பூச நமைச்சல்தீரும், மேல்கூறியப்படி பால்விட்டு அரைத்துப் பால்பிழிந்துகொடுக்க சீதபேதி, ரத்தபேதி, நித் திரைபங்கம் இவைகளுக்குக் கொடுக்க குணமாகும்.

அப்பியங்க ஸ்நானத்தின் உபயோகம்.

வாரத்திற்கு இரண்டுவிசை சனிபுதன்கிழமைகளில் எள் ளெண்ணெயை சிரசில் தேய்த்து ஸ்நானஞ் செய்துவர தலை நோய் அணுகாது மயிர்வளர்த்தியாகும் தலைக்கும் முழங்கா லுக்கும் வலிவுண்டாகும் தாதுகட்டும் பித்தசாந்தியாகும்.

துவரம்பருப்பின் உபயோகம்.

முளைக்கட்டிஉடைத்த துவரம்பருப்பைக்கொண்டுவந்து நன்றாய்வேகவைத்துக் கடையல்செய்து போஜனஞ்செய்யும் போது முதற்சாதத்திற்கு ஆழாக்குப்பருப்பும் கால்ஆழாக்கு நெய்யும் விட்டுக்கொண்டுச் சாப்பிடப் பிடிசாதத்திற்குப் பிடிசதையுண்டாகும் ஆனால் அன்னம் நன்றாய்சமையாதிருந் தால் திரேகபலன்போம் மலசலசிக்குகள் மற்றுநாள் உண்டா கும் சாதம் நன்றாய் வேகவேண்டும்.

கடுக்காயின் உபயோகம்.

கடுக்காய் ரு௰-எடுத்து கழுநீரில் ஒருநாள் ஊரவைத்து மறுநாளும் புதுகழுநீரில் ஊரவைக்கவும் இப்படி-௩-தடவை செய்து யெடுத்து கொட்டைகளை நீக்கி எலுமிச்சம் பழச்சா ற்றில் ஒருநாள் ஊரவைத்து எடுத்து உ-படி புளித்தமோரில் போட்டு அடுப்பேற்றிச் சுண்டக்காய்ச்சி யெடுத்து வைத்துக் கொண்டு மிளகு சீரகம் திப்பிலி சுக்கு பெருங்காயம் வகை க்குப்பலம்-அரை, இந்துப்புபலம்-கஉ, இவைகளைசூரணித்து ஷை கடுக்காய்களில் செலுத்தி உலர்த்தி ஒருஜாடியில் வைத் துக்கொண்டு தினம்ஒருகடுக்காய்வீதம் காலையில் சாப்பிட்டு

வர அரோசிகம் பித்தம் அக்கினிமந்தம் வாயு குன்மம் இவைகள்தீரும், நன்ருய்மலமிரங்கும்.

பாவன சீரகத்தின் உபயோகம்.

ஒருசேர் சீரகத்தை வல்லாரை கையாந்தகரைபொன்னுங்காணி புளியாரை இஞ்சி எலுமிச்சம்பழம் இவைகளின் சாறுகளில் தனித்தனியே ஒருநாள் ஊரவைத்து நிழலில் உலர்த்தி தினம் காலையில் உ - விராகனிடை வீதம் சாப்பிட்டுவர பித்தவாய்வு, ஊஷ்ணம், அக்கினிமந்தம், மலபந்தம்இவைகள் திரும், ரத்தபுஷ்டி தாதுவிர்த்தியுண்டாகும்.

பாவனமிளகின் உபயோகம்.

அரைசேர் நல்லமிளகை க - சேர் கையாந்தகரைச் சாற்றில்போட்டுச் சுண்டக்காய்ச்சிப் பிறகு ஒருசேர் எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டு இந்துப்பு சேர்-வ, சேர்த்துச்சுண்டக்காய்ச்சி நிழலில் உலர்த்தி தினம் காலை மாலை ரு-அல்லது-ய-மிளகுவீதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தம், ஊஷ்ணவாய்வு, தீரும், ரத்தவிர்த்தியாகும்.

பாவன திப்பிலியின் உபயோகம்.

ஒருசேர் பெரிய அரிசி திப்பிலியை யெடுத்து கையாந்தகரை, வல்லாரை, நெய்சுட்டி, சிறுகீரை, இஞ்சி, முசுமுசுக்கை, பொன்னுங்காணி, கீழாநெல்லி, நாயுருவி, இவைகளின் சாற்றில் வகைக்கு மூன்றுநாள் ஊரவைத்து பிறகு எலுமிச்சம்பழச்சார்சேர்-க, இந்துப்புசேர்-அரை,இவ்விரண்டும் சேர்த்து அதில் ரு - நாள் ஊரவைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு தினம் காலையில் ஒருதிப்பிலிவீதம் சாப்பிட்டுவர காசம் ரு, சுவாசம் - ரு, ஊஷ்ணவாயு முதலியவைகள் தீரும், பசியுண்டாம்.

பாவனஓமத்தின் உபயோகம்.

ஒருசேர் ஓமத்தின் அரிசியை ஒருநாள் புளித்தமோரில் ஊரவைத்து உலர்த்தி பிறகுரெண்டுசேர் எலுமிச்சப்பழச்சா

றும் அரைசேர் இந்துப்பும்சேர்த்து அதில் இரண்டுநாள்ஊர வைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு தினம் காலை மாலை இரண்டுதடவையும் ஒருவிராகனிடைவீதங்கொடுக்க வயற்றுவலி அக்கினிமந்தம், வாயு,வயற்றுப்பல், அஜீரணம், குன்மம்முதலிய பற்பலரோகங்கள் குணமாகும்.

வாதுமைஹல்வாயின் உபயோகம்.

கோதுமை, கசகசா, சவ்வரிசி, சுத்தஜலத்தில் இரண்டு மணிநேரம் ஊரவைத்து மேல்தோல் நீக்கின வாதுமைப் பருப்பும் வகைக்கு சேர்-கால், சலத்தில் ஊரவைத்து மைபோல் அரைத்து ச-சேர் பசும்பாலில்கரைத்து அதில் சீனி-சேர்-க, பன்னீர் சேர்-வ, நெய் சேர்-வ, சேர்த்துக் காய்ச்சி பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு வ-சேர்வீதம் சாப்பிட்டுவர தாது புஷ்டியுண்டாகும்.

கோதுமைஹல்வாயின் உபயோகம்.

கோதுமையின் வெண்மையான வரலாநொய்யை யேந்திரத்திலிட்டு மாவாக்கினமாவும் பச்சை சம்பாவரிசியை ஜலத்தில்ஊரவைத்து எடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்த மாவும் வகைக்கு ஆழாக்கு க-ம், யெருமைப்பால் முற்றினதேங்காய்ப்பால் வகைக்குப்படி - க, இவைகளில்சேர்த்துக் கரைத்து யெரித்து அடிக்கடித் தொழாவிக்கொடுத்து பதத்தில் சீனிசேர்-கஉ, வலரிசினாள் விராகனிடை-உ,முன்போல்செய்த வாதுமைப்பருப்பு, சேர்-கால், நெய்சேர்-உ, பன்னீர்சேர்-உ, இவைகளையெல்லாஞ் சேர்த்து சரியானபதத்தில் யெடுத்து வைத்துக்கொண்டு கால்சேர்வீதம் தினம்சாப்பிட்டுவர தாது புஷ்டியுண்டாகும்.

போகவல்லி ஹல்வாயின் உபயோகம்.

சுத்தஜலத்தில் இரண்டுமணிநேரம் ஊரவைத்து தோல் போக்கின பாதுமைப்பருப்பு பலம்-அ, கசகசா-பலம்-ச, சாலாம்மிசிரி பலம் - உ, நீர்முள்ளிவிதை பலம் - க, ஜாதிக்காய் பலம்-அரை, வால்மிளகுபலம்-வ, ஏலம்அரிக்கால்,இவைகளை

பசும்பாலால் அரைத்து ௬-சேர் பசும்பாலில் கரைத்து யெரித்து இரண்டுசேர் ஆக்கி அதில்பன்னீர்சேர்-௨, நெய்சேர்-௧, சீனிசேர்-௨, போட்டுக் காய்ச்சி பதத்திலிரைக்கி வைத்துக் கொண்டு தினம் கால்சேர்விதம் சாப்பிட்டுவர நீர்யெரிவு, போகத்தாலுண்டாகும் ஊஷ்ணம், இவைகள்தீரும், தாதுபுஷ்டியுண்டாகும்.

கிராம்பின் உபயோகம்.

ஒருபலம் கிராம்பை இரவில் முலைப்பாலில் ஊரவைத்து மறுநாள் அந்தப்பாலால்மைபோல் அரைத்து தேன்பலம்-வ, சேர்த்து கொதிக்க வைத்து பதத்தில் இரைக்கி வைத்துக் கொண்டு கடலை அளவாகக் கொடுத்துவர தீபனம் ரத்தவிர்த்தியுண்டாகும்.

வெந்தயத்தின் உபயோகம்.

வெந்தயம் கோதுமைவகைக்கு - ௨ - அவுன்சு வருத்து இரவில் பசும்பாலில் ஊரவைத்துக் காலையில் அதைக்கடைந்து வடித்து நெய் தேன் சர்க்கரை வகைக்கு அவுன்சு-௨,சேர்த்து தினம்காலையில் சாப்பிட்டுவர ரத்தவிர்த்தியுண்டாகும் விந்துஊரும்.

பச்சைக்கடலையின் உபயோகம்.

ஒருபிடி பச்சைக்கடலையை இரவில் ௨ - சேர் ஜலத்தில் போட்டு ஊரவைத்து காலையில் வடித்து அந்தசலத்தில்ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி வகைக்குவிராகனிடை-௨, சூரணித்துப் போட்டு தேன் ௨-விராகனிடைவிட்டு கொடுத்துவர வீரியவிர்த்தியுண்டாகும்.

கசகசாவின் உபயோகம்.

கசகசா வால்மிளகு வகைக்குப்பலம் - ௨, இளம் வருப்பாய் வருத்து அத்துடன் வாதுமைப்பருப்பு சீனுகற்கண்டு வகைக்கு பலம்-௨, சேர்த்து கல்உரலில்போட்டுக் கட்டப்பாரையால் இடித்து லேகியமாகச்செய்து பாக்களவு தினம் காலைமாலை சாப்பிட்டுவர தாதுபுஷ்டியுண்டாகும்.

அகத்திக்கீரையின் உபயோகம்.

அகத்திக்கீரையைக்கொண்டுவந்து பழுப்பைநீக்கிசமைத்துச் சாப்பிட்டுவர பித்தசாந்தியாகும் மலத்தைக்கழிக்கும் மிகநன்று.

முருங்கைக்கீரையின் உபயோகம்.

முருங்கைக் கீரையை காம்பும் பழுப்பும் நீக்கி சமைத்துச்சாப்பிட சிரசு, தாபனம், மூர்ச்சை, உட்சூடு தணியும் இதின்காயைச் சமைத்துச் சாப்பிடவிந்தூறும்.

புளியன் துளிரின் உபயோகம்.

புளியன்துளிரைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்து வைத்துக்கொண்டு துவையல் குழம்புகள் இவைகளில்சேர்த்துச் சமைத்துச் சாப்பிட பாண்டு கண்ணோய் இவைகள் சாந்தியாகும்.

கீரைத்தண்டின் உபயோகம்.

கீரைத்தண்டை சமைத்துச் சாப்பிட ரத்தக்கழிச்சல், கிரிச்சாரம் சாந்தியாகும்.

புதிநாகீரையின் உபயோகம்.

புதினாவைக் கொண்டுவந்து நெய்விட்டுவதக்கி துவையல்செய்து காலையில் பாக்களவு வெறும்வயற்றில் சாப்பிட்டுவரவும், சாதத்தோடு உபயோகிக்கவும் பேதி மந்தம்அரோசகம் சாந்தமாகும்.

வெள்ளைக்கீரையின் உபயோகம்.

வெள்ளைக்கீரையை சமையல்செய்து சாப்பிடமுலைப்பாலதிகரிக்கும் திரேகத்திற்கு சவுக்கியமுண்டாம்.

பருப்புக்கீரையின் உபயோகம்.

பருப்புக்கீரையை சமைத்துச்சாப்பிட பித்தத்தைக்கண்டிக்கும்.

பசலக்கீரையின் உபயோகம்.

பசலக்கீரையைச் சமைத்துச்சாப்பிட வெள்ளைவிழுதல் மூத்திரரோகம் சாந்தியாகும்.

பால்சொரி கீரையின் உபயோகம்.

பால்சொரி கீரையை சமைத்துச்சாப்பிட பித்தத்தைக் கண்டிக்கும் மயக்கத்தை தணிக்கும்.

மூளக்கீரையின் உபயோகம்.

மூளக்கீரையை சமைத்துச் சாப்பிட பசியுண்டாகும், காசரோகத்தை நிவர்த்தியாக்கும் சுரமுள்ளவர்களுக்குக்கொடுக்கலாம்.

முள்ளுக்கீரையின் உபயோகம்.

முள்ளுக்கீரையை சமைத்துச் சாப்பிட்டுவர மந்தம் நீர்கட்டு சாந்தமாகும்.

அரைக்கீரையின் உபயோகம்.

அரைக்கீரையை சமைத்துச் சாப்பிட்டுவரில் காசம் சுரம் சாந்தமாகும் தாதுவிர்த்திக்கும்.

சிறுகீரையின் உபயோகம்.

சிறுகீரையை சமைத்துச்சாப்பிட்டுவரில் கிரிச்சாரம்பித்தம் நேத்திரகாசம் குணமாகும் திரேககுளிர்ச்சியுண்டாம்,

புளியாரைக்கீரையின் உபயோகம்.

புளியாரைக்கீரையை சமைத்துச் சாப்பிட்டுவரில் ரத்தமூலம் பித்தம் மூலவாயு இவைகள் சாந்தியாகும்.

கோழிக்கீரையின் உபயோகம்.

கோழிக்கீரை[illegible] [illegible]மைத்துச்சாப்பிடில் [illegible]கிரப்பான் இவைகள் சாந்த[illegible]

கொத்தமல்லிக்கீரையின் உபயோகம்.

கொத்தமல்லிக் கீரையை சமையல் செய்தாகிலும் தொவையல்செய்தாகிலும் சாப்பிட்டுவர அரோசிகம் பித்தம்-சயவாதம்-அய-ம், சாந்தியாகும் வீரியவிர்த்தியுண்டாம்.

தென்னங்குருத்தின் உபயோகம்.

தென்னங்குருத்தைச் சாப்பிட்டுவர கபம் பித்தம்மூலம் இவைகள் சாந்தமாகும்.

செந்தாமரைப்பூவின் உபயோகம்.

இருமல் தொண்டைகம்மல் சிரசு தாபம் இவைகளுக்குக்கொடுக்க சாந்தமாகும்.

பன்னீர்பூவின் உபயோகம்.

பன்னீர்பூவை பித்தம் வாந்தி இவைகளுக்குக்கொடுக்க சாந்தமாகும்.

பிரம்மதண்டிப்பாலின் உபயோகம்.

கண்சிவப்பு, கண்கசிதல், கண்ணில்நீர்வடிதல், கண்குருகல், கண்வலி இவைமுதலானதற்கும் ஒருதுளி இரண்டுதுளி விட சாந்தமாகும்.

கருவேப்பிலையின் உபயோகம்.

கருவேப்பிலையை துவையல்செய்தாவது அல்லது குழம்பு வைத்தாவது சாப்பிட்டுவர. சீதபேதி சுரம் அரோசிகம் இவைகள் சாந்தமாகும்.

தேங்காய்ப்பாலின் உபயோகம்.

தேங்காயை உடைத்துதிரிகி அப்பட்டமாகப் பால்பிழிக்குஞ் சாப்பி [illegible] லத்தை விர்த்திச் [illegible]

குன்மம் மூலவாயு பாரிசவாயு வயிற்று வலிக்கு.

ஒருபலம் வெள்ளுள்ளியை மேற்றோல்நீக்கி ஆவின்பாலி லவித்து அதில் சீரகம், இந்துப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், பெருங்காயம் இவைகளைவகைக்குப்பலம் ஒன்றுவீதம் வெதுப்பிப் பொடித்துத் தூவிக்கடைந்து வேளை யொன்றி ற்கு யெலுமிச்சங்காய்ப் பிரமாணம் ஒருமண்டலங் கொள்ள த்தீரும்.

சகல குன்மத்திற்கு.

நொச்சி தழுதாழை மாவிலிங்கு இவைகளினிலைகளை ஒர ளவாய்ச் சிதைத்துப் பிழிந்தசாறு ஆழாக்கு வெள்ளுள்ளித் தயிலம் ஆழாக்கு பெருங்காயம் பலம்-க, பொடித்துப்போட் டுக் குழம்பாய்க்காய்ச்சி ஒருகரண்டிவீதம் ௰ - நாட்கொடுக் கத்தீரும்.

அண்டவாதம் நடுக்குவாதம் முடக்குவாதம் சந்துவாதம் முகவாதம் இவைகட்கு.

சித்திர மூலம் மாவிலிங்கு கொன்றை முருங்கை சங்கு வெள்ளறுகு வேம்பு எருக்கு சுக்கு திப்பிலி மிளகு பஞ்சலவ ணம் இவைகளை ஓர்நிரையாய் ரவியிலுலர்த்திச் சூரணித்து ஒருமண்டலம் திரிகடிப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

அரைவாதம் கால்வாதத்திற்கு.

முற்றினதேங்காயைக் கண்திறந்து நீரை நீக்கிப்போட்டு அதற்குள் திருகுகள்ளிப்பால்விட்டு காஞ்சிரை முளையடித்து புளியந்தணலிற் போட்டுச் சுட்டுச் சிரட்டை வெந்தபின் எடு த்து ஓடு நீக்கி அரைக்குக்கீழ் பாதவரைதடவி மாலையில்வெ ந்நீரில் ஸ்நானஞ்செய்யத் தீரும்.

வாதக்கடுப்பு குத்து கைகால் முடக்கு திமிர்வாதத்திற்கு.

புனலித்தண்டு திருகுகள்ளி சுடுதூரத்தி தழுதாழை முடக்கொத்தான் வேப்பம்பட்டை சங்குகுத்தாமணி வெண்

ஞெச்சி வெள்ளிண்டு பிரப்பங்கிழங்கு வகைக்குப்பலம் - ௰, இடித்து ஒரு பாண்டத்திற்போட்டு அன்ருடஞ் செலம் விட்டுக் கொதிக்கவைத்து வேதுவிடவும்.

பக்கவாதம் முகவாதந் திமிர் நடுக்குவாதம் முதலான சகலவாதத்திற்கும் உட்குத்துப்புற வீச்சுக்கும் தலைவலிக்கும் மேற்பூச்சு.

உகாய்எருக்கு கழற்கொடி மாவிலிங்கு சாரணை குப்பைமேனி கருநொச்சி கொன்றை ஈசுரமூலி தொடுவேலி இவைகளின் வேர்ப்பட்டை, சுக்கு திரிகடுகு வசம்பு வெளிச்சிப்பிசின் அரத்தை வெள்ளைப்பூடு கருஞ்சீரகம் இவைகளை ஓர்நிரையாய் உத்தாமணிச் சாற்றிலாட்டி கொதிக்க வைத்துப் பூசத்தீரும்.

வாதக்கடுப்புக்கு மேற்பூச்சு.

கள்ளிக்கொழுந்தை வாட்டிப்பிழிந்த சாற்றில் பூநீர் சீரகம் வகைக்குஒருசிரங்கைபோட்டு மறுநாளைக்குத்தண்ணீராற் கடுகையரைத்து கடுக்கிற இடத்திற்பூசத் தீரும்.

முழங்கால் வாதத்திற்கு.

வீழியிலை பிண்ணாக்குப்பூடு அவரையிலை வெள்ளைப்பூடு இவைகளை யோர்நிறையாய் இடித்து ஒரு துணியில் முடிந்து விளக்கெண்ணையில்வெதுப்பி ஒத்தணஞ்செய்து ஆறுநாட் கட்டத்தீரும்.

வாதக்கடுப்பு வாயுக்கு.

சங்கம்வேர், முக்கொழுஞ்சு, கொடுவேலி, பரங்கிப் பட்டை, சுக்கு,வாய்விளங்கம், சிறுதேக்கு, கொத்தமல்லி வகைக்குவிராகனிடை-உ, இவைகளைச்சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்துஅதில்ஒருவிராகனிடை மிளகுப்பொடியும் ஒருதுட்டிடை விளக்கெண்ணெயுஞ்சேர்த்து இப்படி ஆறுவேளை கொடுக்கத்தீரும்.

வாதக்கடுப்பு முடக்குவாதம் மேகவாயுவிற்கு.

பரங்கிப்பட்டை சித்திரமூலம் சங்கு அமுக்கிரு இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப்பலம் - ௩, திரிகடுகு,சீரகம் ஏலம் வகைக்குப் பலம்-௨, இவைகளை இடித்துச் சூரணித்து ஒருசட்டியில் அரைப்படி ஆவினெய்யும் காற்படிதேனும் எட்டுப்பலம் சீனியுங்கூட்டிக் காய்ச்சி யிறக்கி அதில்சூரணத்தைத் தூவிக்கிண்டி வேளையொன்றுக்கு ஒருகொட்டைப்பாக்களவுகொள்ளத்தீரும்.

அண்டவாதத்திற்கு.

ஒருபிடி கருஞ்சீரகமும் - ௰-வெள்ளைப்பூண்டும் தேனிற் குழைத்து இந்தப்படி ஆறுபோது கொள்ளத்தீரும்.

முருங்கையிலை ஒருபிடி வெந்தயம் வெள்ளுள்ளி கழற்பருப்பு வகைக்குப்படி அரைக்கால்,சுக்குமிளகு வகைக்குவிராகனிடை-௨, இவைகளை மயனமாயரைத்துக் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

தண்டுவாதத்திற்கு.

பிரண்டைத்தண்டு கோவைத்தண்டு சீந்திற்றண்டு இவைகளைச்சிதைத்துக் காற்படிசாறுபிழிந்து சுக்கு மிளகு ஈருள்ளிவகைக்கு விராகனிடை-௩, அரைத்துக்கலக்கி இந்தப்படி ௩-நாட்கொடுத்து சாத்தட்டியிலையை அரைத்துத் தண்டிற் பூசத்தீரும்.

சந்துவாதத்திற்கு.

தேங்காய்க்குள் கடுகைப்போட்டு மூடி ஓடுவெந்தபின்பு கடுகைக்கொட்டி மோரில் அரைத்துக் கலக்கி மூன்று நாட்கொடுக்கத்தீரும், முட்குருந்தம் பட்டையும் பாஞ்சாவேரும் ஒருஎலுமிச்சங்காய்ப் பிரமாணமரைத்து வெந்நீரிற்கரைத்து உள்ளுக்குச் சாப்பிட்டு மேற்படி வேர்களையரைத்து சந்திற் பூசத்தீரும்.

தோள்வாதத்திற்கு.

தழுதாழை, நொச்சி, வாதமடக்கி இவைகளையிடித்துத் தண்ணீரிற்போட்டுக் காய்ச்சி வேதுவிட்டுவிளக்கெண்ணெயைப்பூசிப் பிடித்